வியாழக்கிழமை 22 செப்டெம்பர் 2022
தமிழருவி வார இதழ் | Tamilaruvi weekly

# தமிழருவி




அருவி: 02 | சாரல்: 35

தமிழின் தலைநிமிர்வு




நேசமிகுந்த தலைவனுடன் நெருங்கியிருந்த பொழுதுகள்

காலம் ஆகினார் கண்களுக்குள் நீங்காமல்!

## நெஞ்சம் மறக்காத நேயராக
# துன் சாமிவேலு




# அணுவணுவாய்
## கொல்லும் அணுவாயுதங்கள்!

# சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை குறித்து அமைச்சரவைக்கும் அறிவிக்கப்படவில்லை

## உறுதிப்படுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான உடன்படிக்கை தொடர்பில் இதுவரை அமைச்சரவைக்குத் தெரிவிக்கப்படவில்லை என இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஊழியர் மட்ட உடன்படிக்கை என்றபோதிலும், அதற்கும் சா்வதேச நாணய நிதிய பணிப்பாளர்களின் அனுமதி அவசியமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டியதாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

அத்துடன், இதற்கு முன்னர் கடன் வழங்கிய ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடி, அந்த நாடுகள் வழங்கும் அறிக்கைகளும் இதில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன் அதுவரை எவருக்கும் இது தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியாது எனவும் சபாநாயகர் இதன்போது தெரிவித்தார்.

# ஜப்பான் செல்கிறாா ஜனாதிபதி ரணில்

முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துக் கொள்வதற்காக இலங்கை அதிபா் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை ஜப்பான் செல்லவுள்ளார்.

ஜப்பானின் நீண்ட காலம் பிரதமராக இருந்த அபே, ஜுலை 8 அன்று, தனது 67 வயதில் தனது அரசியல் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

செப்ரெம்பர் 27 அன்று நடைபெறும் அபேயின் இறுதி மரியாதையில் ஜப்பான் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து நூற்றுக் கணக்கான பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானுக்கான விஜயத்தின் போது அதிபா் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானிய பிரதமா் ஃபுமியோ கிஷிடா மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கைக்கு கடன்வழங்கும் நாடுகளின் மாநாடு ஒன்றையும் இதன்போது நடத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

ஜப்பானுக்கான விஜயத்தைத் தொடர்ந்து ஜனாதிபதி பிலிப்பைன்ஸுக்கும் பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இருவர் கைதுக்கு எதிராக யாழில் இன்று ஆர்ப்பாட்டம்




குருந்தூர்மலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டமைக்கு நீதி கோரியும் பௌத்தமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் இன்றைய தினம் பேரணி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக இன்று நண்பகல் 12 மணியளவில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் அங்கிருந்து கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக இராமநாதன் வீதி ஊடாக பரமேஸ்வராச் சந்தியை அடைந்து அங்கிருந்து சிறிது நேரம் வீதியை முடக்கி போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பின்னர் பேரணியாக பல்கலைக்கழகத்தை வந்தடைந்தனர். முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும், நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து நேற்றையதினம் குருந்தூர்மலையில் அப்பகுதி மக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், சிவில்சமூகப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்புடன் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் இ.மயூரன் ஆகியோர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனை கண்டித்தே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ரவிகரன் மற்றும் மயூரனை விடுதலை செய், எமது காணி எமக்கு வேண்டும், எமது மலை எமக்கு வேண்டும், குருந்தூர் மலையை ஆக்கிரமிக்காதே போன்ற கோஷங்கள் பல்கலைக்கழக மாணவர்களால் எழுப்பப்பட்டது.

ரவிகரன் மற்றும் மயூரன் விடுதலை செய்யப்படாவிட்டால் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எச்சரிக்கை விடுத்தனர்.

# தொல்பொருள் திணைக்களத்தின் நில ஆக்கிரமிப்பை நிறுத்துங்கள்

## நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் சித்தார்த்தன்

வடக்கு, கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தின் நில ஆக்கிரமிப்புகள் தமிழ் மக்கள் மத்தியில் நல்ல எண்ணங்களை ஏற்படுத்தப் போவதில்லை என்றும், இதனால் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற, அரச வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது சித்தார்த்தன் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கபதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது வரிகள் மற்றும் அவற்றை உயர்த்துவதாகவே இருக்கும். அதன்போது சாதாரண ஏழை மக்கள் பாதிக்காதவாறு இருக்க வேண்டும். இன்று சிலநேரங்களில் சில குடும்பங்கள் ஒருவேளை, இரண்டு வேளை மாத்திரம் சாப்பிடும் நிலைமையே உள்ளது. இந்த நிலைமை அதிகரித்துவிடக் கூடாது என வலியுறுத்தினாா்

பாதுகாப்பு நிதி யுத்தத்திற்கு பின்னரும் அதே அளவிலேயே ஒதுக்கப்படுகின்றது. இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது எனக் கேள்வி எழுப்பிய சித்தார்த்தன், வடக்கு கிழக்கில் இந்துக் கோயில்களை தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வருவதுடன், அங்கு பௌத்த கோயில்களை கட்டுவதிலும் ஈடுபடுகின்றது எனவும் தெரிவித்தார்.

பஞ்ச ஈஸ்வரங்கள் என்று அழைக்கப்படும் கோயில்களில் ஒன்றான கோணேஸ்வரத்தில் சுற்றுலாத்தளத்தை உருவாக்கி மிகப்பெரிய பௌத்த கோயில் அமைக்கப்படவுள்ளது. இப்படி பல்வேறு விடயங்களை செய்து கோணேஸ்வரத்தின் புனிதத் தன்மையை இல்லாது செய்ய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த ஆலயத்திற்கான 18 ஏக்கர் நிரப்பரப்பை அபகரிக்கும் நிலைமையும் உருவாகியுள்ளது. இதனை உடனடியாக நிறுத்தி, கோணேஸ்வரத்தை புனிதத் தலமாக பிரகடனப்படுத்த வேண்டும் என சித்தார்த்தன் வலியுறுத்தினார்.

அதேபோன்று குருந்தூர் மலையிலும் ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன. நீதிமன்ற உத்தரவையும் மீறி கட்டிட நிர்மானங்கள் நடக்கின்றன. இவைகள் தமிழ் மக்கள் மத்தியில் நல்ல எண்ணங்களை கொண்டுவரப் போவதில்லை எனச் சுட்டிக்காட்டிய சித்தார்த்தன், ஜனாதிபதி புலம்பெயர் தமிழர்கள் தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றார். புலம்பெயர் அமைப்புகள் சிலவற்றின் தடைகள் நீக்கப்பட்டுள்ளன. ஆனால் பல அமைப்புகளுக்கு இன்னும் தடைகள் இப்போதும் உள்ளன. கொள்கை ரீதியான விடயமாக இதனை எடுத்துக்கொள்ள வேண்டும். இங்குள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றே அவர்கள் அங்கே பாடுபடுகின்றனர் எனத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவையில் பேசிய இந்திய பிரதிநிதி, அரசியல் தீர்வு இன்றி இன இணக்கப்பாடு கிடையாது. இன இணக்கப்பாடு இல்லாவிட்டால் பொருளாதார வளர்ச்சி இருக்காது என்று கூறியுள்ளார். இதனை பெரும்பான்மையினர் புரிந்துகொள்ள வேண்டும். அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலம் அனைத்து இனத்தவர்களும் இணைந்து நாட்டை பொருளாதார ரீதியில் சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்ல முடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினா் சித்தார்த்தன் தெரிவித்தார்.

# எனது தந்தையின் கோலைக்கான நீதியை ஹேய்க் மக்கள் தீர்ப்பாயம் வழங்கியுள்ளது

## லசந்த விக்கிரமதுங்கவின் மகள் தெரிவிப்பு



இலங்கை அரசாங்கம் 13 வருடங்களாக சாதிக்காததை நெதா்லாந்தின் ஹேய்க் நகரிலுள்ள மக்கள் தீர்ப்பாயம் சாதித்துள்ளது எனத் தெரிவித்துள்ள படுகொலை செய்யப்பட்ட இலங்கையின் பிரபல பத்திரிகையாளா் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்ஸா விக்கிரதுங்க, தனது தந்தையை படுகொலை செய்ததில் இலங்கை அரசாங்கமே குற்றவாளி என ஹெய்க்கின் மக்கள் தீர்ப்பாயம் கண்டறிந்திருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

சன்டே லீடா் பத்திரிகை ஆசிரியரும், சட்டத்தரணியுமான லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடா்பாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஹேய்க் நகரில் மக்கள் தீர்ப்பாயம் குற்றப்பத்திரிகையை வெளியிட்டுள்ளது. இதனையடுத்து ருவிட்டா் பதவிவொன்றை வெளியிட்டுள்ள அகிம்ஸா விக்கிரமதுங்க, இலங்கை அரசாங்கம் 13 வருடங்களாக சாதிக்காததை நெதா்லாந்தின் ஹேய்க் நகரிலுள்ள மக்கள் தீர்ப்பாயம் சாதித்துள்ளது எனத் தெரிவித்திருக்கின்றார். தனது தந்தையின் கொலைக்கான நீதியை இந்த மக்கள் தீர்ப்பாயம் வழங்கியிருக்கின்றது எனவும் தெரிவித்துள்ள அகிம்ஸா, மக்கள் தீர்ப்பாயத்துக்கும், பத்திரிகையாளா்களைப் பாதுகாப்பதற்கான குழு, எல்லைகளற்ற செய்தியாளா் அமைப்பு ஆகியவற்றுக்கு தமது குடும்பத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதாக கூறியிருக்கின்றார்.

இந்த அமைப்புக்கள்தான் மக்கள் தீர்ப்பாயத்துக்கு தமது தந்தையின் விவகாரத்தைக் கொண்டுவந்து உரிய செயற்பாடுகளை முன்னெடுத்திருந்ததாகவும் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்ஸா தனது ருவிட்டா் செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

# வடக்கு, கிழக்கு எம்.பி.க்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டம்!

## நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நாடாளுமன்ற வியாழன் அமர்வில் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது, போர்க்குற்றம் தொடர்பில் வெளியக விசாரணைகள் இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணானவை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கேள்வி எழுப்பப்பட்டது.

கடந்த 2015 செப்டம்பரில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் அனுசரணையில் அதாவது அவரது இணக்கத்துடன், 33/1 என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டது. அதில், சர்வதேச நாடுகளில் நீதிபதிகளால் விசாரிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய அது பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள் என்றவாறு மாற்றப்பட்டிருந்தது.

எனினும், இந்த முறை வெளிவிவகார அமைச்சருடன் அப்போதைய மற்றும் தற்போதைய நீதியமைச்சராக விஜேதாச ராஜபக்ஷவும் ஜெனிவா சென்றிருந்த நிலையில், அரசாங்கத்தின் நிலைப்பாடு அமர்வின்போது தெரிவிக்கப்பட்டது. இதன் போது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளியக பொறிமுறை அரசியலமைப்புக்கு முரணானது என்று குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக 2015 ஆம் ஆண்டு அரசியமைப்புக்கு உட்பட்டிருந்த இந்த விடயம், தற்போது அரசியலமைப்பு முரணானது எப்படி என்று சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியது. இதற்கு பதிலளித்த நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, தமிழ் தேசியக்கூட்டமைப்பு இந்த விடயத்தில் கொண்டிருக்கும் அக்கறையை தாமும் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

எனினும், மாறிவந்த அரசாங்கங்கள் காரணமாக இதில் மாற்றங்கள் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்த நிலையில் இந்த பிரச்சினை குறித்து எதிர்வரும் வாரங்களில் வடக்கு, கிழக்கில் நிலையான சமாதானத்தை பேணும் வகையில் வட, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக அமைச்சா் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.




**செய்தி:-**

*விமானத்தில் விசேட கழிப்பறையை அமைக்க 600 கோடிகளை ஒதுக்கிய மகிந்த.*

**சரத் பொன்சேகா**

600 கோடிகளுக்கு எத்தனை பூச்சியம் என்று தெரியாத சாமான்யர்கள் இந்த அரசியல் கழிவுகள கடந்து போய் கனகாலம்.

# சிவ வழிபாடு இலங்கையில் இல்லை இராவணனும் இங்கு இருக்கவில்லை

## பாராளுமன்றத்தில் சரத் வீரசேகர உரை

இலங்கையில் இராவணன் என்ற மன்னனும் இல்லை சிவ வழிபாடும் கிடையாதெனத் தெரிவித்த முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் எம்.பி.யுமான சரத் வீரசேகர திருக்கோணேஸ்வராலயத்திலுள்ள கடைகளை சிங்களவர்களுக்கு கொடுப்பதற்கு ஆலய பரிபாலன சபையே விரும்பும் நிலையில் தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்கள் மட்டும் எதிர்ப்பது அவர்களின் அரசியல் ஆதாயத்துக்கே எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெற்ற திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

திருகோணேச்சரம் ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்று பின்னணி காணப்படுகிறது. இராணவன் திருகோணேச்சர ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுப்பட்டதாக குறிப்பிடுகிறார்கள்,ஆனால் இராவணன் என்ற மன்னன் இருந்தாரா,அவர் தமிழரா,சிவ வழிபாட்டில் ஈடுப்பட்;டாரா என்பதற்கு எவ்வித சான்றும்,வரலாறும் இல்லை.

திருக்கோணேச்சரம் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் 300 ஏக்கர் நிலப்பரப்பு காணப்படுகிறது.இதில் 18ஏ க்கர் நிலரப்பு மாத்திரம் கோயிலுக்கு சொந்தமானது.ஆலயத்துக்கு செல்லும் பாதையில் சுமார் 60 கடைகள் உள்ளன.இந்த கடைகளை சிங்கவர்கள் வைத்திருப்பதால் கூட்டமைப்பினர் அதற்கு எதிராக இனவாதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

திருகோணேச்சரம் ஆலயத்தின் வீதி இருமருங்கில் உள்ள கடைகளை புதுப்பிக்க ஆலயத்தின் நிர்வாக சபையினர் விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.கிழக்கு மாகாண ஆளுநர் இனவாதமற்றவர். திருகோணமலை ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்று பின்னணியே காணப்படுகிறது.திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தூபிகள் இருந்துள்ளன அவற்றில் மூன்று தூபிகள் கடலை நோக்கியதாக அமைந்ததால் அது திருகோணேச்சரம் என பெயர் பெற்றுள்ளது,அத்துடன் மகாவம்சத்திலும் இவ்விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது,ஆகவே எமக்கும் வரலாறு தெரியும் நாங்களும் குறிப்பிடுவோம்.

திருகோணேச்சரம் ஆலயத்தின் தொன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் பாதுகாக்கிறோம். அதுபோல் நீங்களும் குருந்தூர் மலையை பாதுகாக்க கவனம் செலுத்துங்கள். தமிழ் அடிப்படைவாதிகளினால் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தாக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# சம்பந்தனை பதவி நீக்குவதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை

## சுமந்திரன் அறிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவா் இரா.சம்பந்தனை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கூடிய இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில், இது தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியிலிருந்தும், பாராளுமன்ற உறுப்புரிமையிலிருந்தும் இரா.சம்பந்தனை விலக்குவதற்காக அவருடன் கலந்துரையாட மத்திய குழு கூட்டத்தில் குழு நியமிக்கப்பட்டதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை திருக்கோணேஷ்வரர் ஆலய சூழலில் இடம்பெற்று வருகின்ற அத்துமீறிய நிர்மாணப் பணிகள் தொடர்பில் இந்த கூட்டத்தின் போது விடயங்கள் முன்வைக்கப்பட்டதாகவும் அது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுடன் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டிய மூவா

## நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி விபரிப்பு

ஏழு மூளை உடைய பஸில் ராஜபக்ச, தன்னிச்சையான கொள்கையுடைய கோட்டாபய ராஜபக்ச மற்றும் பொருளாதார படுகொலையாளி கப்ரால் ஆகிய மூவருமே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டும் எனத்தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினா் எஸ்.எம்.மரிக்கார் பொருளாதாரத்தை படுகொலை செய்தவர்கள் அரச வருமானத்தை அதிகரிக்க அவதானம் செலுத்துகின்றமை நகைப்புக்குரியது எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் அரச வருவாய் அதிகரிப்பு தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு அவா் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வது தொடர்பில் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சமர்ப்பித்துள்ள பிரேரணை வரவேற்கத்தக்கது. அதேவேளை நகைப்புக்கிடமானது. சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் முக்கிய அமைச்சு பதவிகளை வகித்த இவர் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை விமர்சித்ததால் இன்று அமைச்சு பதவி இல்லாமல் உள்ளார் என மரிக்கா் தெரிவித்தார்.

ஏழு மூளை உடையவர் என வர்ணிக்கப்பட்ட பஸில் ராஜபக்ச, தன்னிச்சையான கொள்கையுடைய அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் பொருளாதார படுகொலையாளி கப்ரால் ஆகிய மூவருமே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டும் .

# சாவதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்த விபரங்களை இப்போது வெளியிட முடியாது

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கை அரசாங்கத்தின் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை முடியும் வரை ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையின் இணக்கப்பாட்டு அம்சங்களை பகிரங்கப்படுத்த முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிபோது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினரும் அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவருமான ஹர்ஷ டி சில்வா, சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாடு தொடர்பில் நாடாளுமன்றுக்கு அறிக்கையிடுமாறு அரசாங்கத்திடம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம். இணக்கப்பாட்டில் உணர்வு பூர்வமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அவற்றை வெளிப்படுத்த முடியாது என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம், இருப்பினும் கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்புக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு முன்னர் ஒரு சில விடயங்களையாவது பாராளுமன்றுக்கு சமர்ப்பியுங்கள் என்பதையே கோருகிறோம் என்றார்.

இதற்கு பதிலளித்த போது, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கும் விடயங்களை மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச மட்டத்தில் நிதி மற்றும் சட்டத் துறைக்கான நிபணர்களின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. நிதி மற்றும் சட்ட ஆலோசனை குழுவின் ஆலோசனைகளுக்கமையே ஆரம்பக்கட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை இடம்பெறும் நிலையில் ஆரம்பக்கட்ட இணக்கப்பாட்டு அம்சங்களை பகிரங்கப்படுத்த முடியாது. இறுதி கட்ட பேச்சுவார்த்தை முடிவடைந்ததை தொடர்ந்து அறிக்கை முழுமையாக நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றார்.

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## மருந்தில்லா வியாதி!

நாட்டில் தற்போது 96 வகையான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஒரளவு கையிருப்பில் உள்ள 14 வகையான மருந்துகள் எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடியதல்ல என்பது மேலதிக தகவல்.


இது நாட்டின் பொருளாதார நெருக்கடியையும் பணவீக்கத்தையும் பட்டவர்த்தனமாக காட்டுகிறது. இருண்ட யுகத்தில் இருந்து மீள இன்னும் காலங்கள் உருண்டோடியாக வேண்டும். மருந்து தட்டுப்பாடு தலைவிரித்து ஆடும் இந்தக்காலப்பகுதியில் தமிழர்களின் பூர்வீக நிலங்களில் இன்னுமொரு வியாதி மீண்டும் தலைவிரித்து ஆடத்தொடங்கியுள்ளது.

இந்தவியாதி தமிழர்களின் நிலங்களில் உள்ள தொல்பொருள் பாதுகாப்பிற்கு உரிய இடங்களில் பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதிலும். புராதன ஆதாரங்களை சிதைப்பதையும் அறிகுறிகளாகக்கொண்டு பரவும் வியாதி.இதன் பிரதான காவியாக தொல்பொருள் திணைக்களம் இனங் காணப்பட்டுள்ளது.

'இலங்கையில் சிவவழிபாடும் இல்லை இராவணன் என்ற மன்னனும் இல்லை' என இன்று பாராளுமன்றில் முழங்கியிருந்தார் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர. பொருளாதார குற்றங்களுக்கு வகைசெல்லவேண்டியவர்கள் இனவாதத்தை கையில் எடுத்துக்கொண்டு காப்பரண் அமைப்பதை இது தெளிவாக புலப்படுத்துகிறது குருந்தூர் மலையில் தற்போது புகையும் இனவாதத்தீயின் புகை ஜெனீவாவை எட்டாததன் தங்கமலை இரகசியத்தை தமிழ்த்தரப்புகள் மட்டுமே அறியும்.

காலனித்துவத்தின் பிடியில் இருந்து நீங்கிய நாடுகள் இன்று சமாதானப்பூங்காவாக மணம் வீசுகையில் இனவாதத்தீயில் குளிர்காய்கிறது இலங்கையின் பேரினவாத அரசியல்.

**மருந்தில்லா இந்த வியாதிக்கு மாற்று மருந்து யார் கையில்?**




## தொல்லை தரும் தொல்பொருள் திணைக்களம்!

# தொடரும் குருந்தூர் மலை மீதான ஆக்கிரமிப்பு

பவித்திரா

குருந்தர் விவகாரம் மீண்டும் சூடுபிடித்துள்ளது. நீதிமன்ற உத்தரவையும் மீறி இங்குகட்டுமாணங்களை முன்னெடுப்பதில் மகாசங்கத்தினரும், தொல்பொருள் திணைக்களமும் தீவிரமாக உள்ளதை கடந்த சில தினங்களில் காணமுடிகின்றது.

நீதிமன்ற உத்தரவையும், தொல்பொருள் திணைக்களத்துக்குள்ள அதிகாரத்தையும் மீறி சட்டவிரோதமான முறையில் பௌத்த கோவிலை அமைத்த பிக்குகளும் அதிகாரிகளும், சுதந்திரமாக இருக்க, அதற்கு போராட்டத்தை சாத்வீகமான முறையில் முன்னெடுத்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இருவா் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். மற்றொருவருக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.



### மறைமுக வேலைத்திட்டம்

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் பவற்றை முன்னெடுப்பதற்குக்கூட நிதி இல்லாதிருக்கும் நிலையில், முல்லைத்தீவு குருந்தூர் மலையிலும், திருகோணேஸ்வரம் பகுதியிலும் பாரிய கட்டுமாணப்பணிகளை முன்னெடுக்க பௌத்த பிக்குகளும், அவா்களுக்குப் பின்னணியிலிருந்து செயற்படும் அதிகாரிகளும் தயாராகியிருக்கின்றார்கள். இதற்கு தொல்பொருள் திணைக்களம் தனது வரம்பை மீறி அநுசரணைய வழங்கும் அதேவேளையில் அரசாங்கமும் சத்தமில்லாமல் தமது ஆதரவை வழங்கிவருகின்றது. அரசாங்கத்தின் மறைமுக ஆதரவு இல்லாமல் இவற்றை செய்ய முடியாது என்பது அனைவருக்கும் தெரியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குருந்தூர்மலை, தண்ணிடுறிப்பு, குமுழமுனை கிராமங்களில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 632 ஏக்கா் காணியை தொல்பொருள் திணைக்களம் சுவீகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் மக்களுடைய எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே இதற்கான நடவடிக்கைகள் தொல்பொருள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டது. அதே வேளையில், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் பௌத்த கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்கிருந்த ஆதி சிவன் கோவில் அழிக்கப்பட்டே இந்த கட்டுமானப் பணியை தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் பௌத்த பிக்குகள் முன்னெடுத்துவருகின்றார்கள்.

குருந்தூர்மலைப் பகுதியில் பௌத்த சின்னங்கள் காணப்பட்டன எனக் கூறப்பட்டே இங்கு பௌத்த ஆலயம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் பௌத்த பிக்குகளால் முன்னெடுக்கப்பட்டது. இதற்கு தொல்பொருள் திணைக்களமும் முழுஅளவிலான ஆதரவை வழங்கிவருகின்றது. இதற்காக இந்த மலை உச்சியில் காணப்பட்ட ஆதி சிவன் கோவில் அழிக்கப்பட்டது. அங்கிருந்த சிவன் ஆலயத்தின் சின்னங்கள் காணாமல்போயிருந்தன. பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கித் தவிக்கும் நிலையில், தென்பகுதியிலிருந்து சொகுசு பஸ்களில் வந்த பிக்குளே இவற்றை மேற்கொண்டார்கள்.

### தொல்பொருள் சட்டம் சொல்வதென்ன?

தொல்பொருள் சட்டத்தின்படி இவ்வாறு செய்ய முடியுமா என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியா் பரமுபுஷ்பரெத்தினத்திடம் கேட்ட போது இதற்கு அவா் விரிவாக விளக்கமளித்தார். அவரது கருத்து இதுதான் –

பௌத்த – சிங்கள மக்கள் வசிக்காத ஒரு இடத்தில் பௌத்தம் சார்ந்த ஒரு அழிபாடுகள் கண்டுபிடிக்கப்படுமானால் அவற்றை மீளக்கட்டி வழிபாட்டுக்குரியதாக அமைப்பதை ஏற்பதாக தொல்லியல் சட்டம் கூறவில்லை. அநுராதபுரத்தில் 20 க்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சைவ ஆலயங்கள், திராவிட கலை மரபில் கட்டப்பட்டவை. அந்த ஆலயங்களின் அழிபாடுகள் தேசிய மரபுரிமைச் சின்னங்களாகக் கருத்திற்கொண்டு பார்க்கப்பட்டதே தவிர, அவை மீள அமைக்கப்பட்டு வழிபாட்டுக்குரிய ஆலயங்களாக அமைக்கப்படவில்லை.

எனவே குருந்தூரில் பௌத்த எச்சங்கள் காணப்படுமானால் அவற்றை கண்டறிந்து ஆய்வு செய்து பாதுகாத்து ஒரு மரபுரிமைச் சின்னமாகக்கொள்ள வேண்டுமே தவிர, முன்னொருகாலத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான ஒரு சின்னமாகக் கருத்திற்கொண்டு அதனை மீளக்கட்டி ஒரு ஆலயமாக மாற்றுவது தொல்லியல் நடைமுறையின் சட்டங்களுக்கு முரணானதாகவே பார்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு சொல்கின்றாா் பேராசிரியா் புஷ்பரெத்தினம்.

நீதிமன்ற உத்தரவின்டி இங்கு பௌத்த கோவில் ஒன்றை அமைக்க முடியாது.

மிகுதி 22 ஆம் பக்கத்தில்...

> குருந்தூரில் பௌத்த எச்சங்கள் காணப்படுமானால் அவற்றை கண்டறிந்து ஆய்வு செய்து பாதுகாத்து ஒரு மரபுரிமைச் சின்னமாகக்கொள்ள வேண்டுமே தவிர, முன்னொருகாலத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான ஒரு சின்னமாகக் கருத்திற்கொண்டு அதனை மீளக்கட்டி ஒரு ஆலயமாக மாற்றுவது தொல்லியல் நடைமுறையின் சட்டங்களுக்கு முரணானதாகவே பார்க்கப்பட வேண்டும்.

# சோவியத் ஒன்றியத்தை கட்டியெழுப்ப படை திரட்டலுக்கு தயாராகிறார் புடின்!

## பொதுமக்களிடம் வலுக்கும் எதிர்ப்பு

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்றதன் பின்னர் ஒவ்வொரு நாடுகளும் தனி சுதந்திரம் பெற்றுக் கொண்டிருந்தன.

இந்த நிலையில் ரஷ்யா, பிரிந்து சென்ற சோவியத் யூனியன் என்னும் மாபெரும் சாம்ராஜ்ஜியத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அவர்கள் இராணுவ நடிவடிக்கைகளை ஆரம்பித்திருந்தார். இதன் பொருட்டு இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பினை மேற்கொண்டு வருகிறார் இந் நடவடிக்கைக்கான எதிர்பினை ரஷ்யர்கள் ஆங்காங்கே வெளிப்படுத்தி வருகின்றனர்.



இந்த வகையில் தற்போது உக்ரைனின் நிலப்பரப்புக்களை கைப்பற்றி மீண்டும் ரஷ்யாவுடன் இணைப்பதற்கான முயற்சிகளை எடுத்து வரும் நிலையில் ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளின் எதிர்ப்பையும் கண்டணங்களையும் சந்தித்து வந்த அதே வேளை ஆசிய தரப்பில் இருந்து குறிப்பிட்டளவு ஆதரவு கிடைக்கப்பெற்றவந்திரந்தது ஆனால் தற்போதைய சூழலில் மத்திய ஆசிய தரப்பில் இருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பத் தொடங்கியிருக்கின்றது.

குறிப்பாக துருக்கியின் செயற்பாடுகள் ரஷ்யாவிற்கு எதிராக காணப்படுகின்றது எனவும் துருக்கி ரஷ்யாவுடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளை முறித்துக் கொள்ளும் வகையில் தனது செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டு வரும் நிலையில் இது வரை ரஷ்யாவிற்கு கிடைத்து வந்த துருக்கியின் பலம் இப்போது குறைவடையத் தொடங்கியிருக்கின்றது.

தற்போதைய ரஷ்யாவின் நிலை மிகவும் பரிதாபமான ஒரு நிலையாகவே காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

உக்ரைனில் தொடர் பின்வாங்கல்கள், ஐரோப்பாவின் எதிர்ப்பு, நேட்டோவின் தடை அத்துடன் தற்போது மத்திய ஆசிய நாடுகளின் விமார்சனம் என அனைத்து பக்கங்களிலும் ரஷ்யா அடி வாங்கிக் கொண்டு இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# கோவிற் தோற்றை கண்டறியும் முகக்கவசம் சீனாவில் கண்டுபிடிப்பு



சீன ஆராய்ச்சியாளர்கள் கொவிற் தொற்றை கண்டறியும் முகக்கவசத்தை உருவாக்கியுள்ளனர், இது பயனர்கள் கொவிட் -19 அல்லது காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளதா என்பதை அறிய உதவுகிறது, இது பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உதவக்கூடிய ஒரு வளர்ச்சியாகும்.

ஷாங்காயில் உள்ள டோங்ஜி பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஆறு விஞ்ஞானிகள் தலைமையிலான ஆய்வின்படி, முகக்கவசத்தில் கட்டப்பட்ட ஒரு சென்சார் காற்றில் உள்ள கொவிட் -19, H5N1 மற்றும் H1N1 இன்ஃப்ளூயன்ஸா வைரஸ்களை 10 நிமிடங்களுக்குள் கண்டறிந்து ஒரு சாதனத்திற்கு அறிவிப்புகளை அனுப்பும். சக மதிப்பாய்வு செய்யப்பட்ட கண்டுபிடிப்புகள் திங்களன்று மேட்டர் என்ற அறிவியல் இதழில் வெளியிடப்பட்டன.

கொவிட் -19 தொற்றுப் பரவல் ஒரு சில நாடுகளில் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, முகக்கவசம் கட்டாயம் என்ற நிலை தளர்த்தப்பட்டது.

இருப்பினும், சீனா உள்ளிட்ட நாடுகளில் முகக்கவச பயன்பாடு பரவலாக உள்ளது, இது கடுமையான கொவிட்-பூச்ஜிய கொள்கையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் உலகெங்கிலும் உள்ள பலர் அரசாங்க விதிகளைப் பொருட்படுத்தாமல் தங்களையும் மற்றவர்களையும் வைரஸிலிருந்து பாதுகாக்க அவற்றை அணிந்து கொள்கிறார்கள்.

செப்டம்பர் தொடக்கத்தில் ஆக்சியோஸ்-இப்சோஸ் கணக்கெடுப்பில் 37 சதவீத அமெரிக்கர்கள் வீட்டிற்கு வெளியே முகக்கவசங்களை அணிவதைக் கண்டறிந்துள்ளனர், இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 89 சதவீதமாக இருந்தது.

ரிச்சார்ஜபிள் லித்தியம் பேட்டரி மூலம் முகக்கவசத்திற்கு வெளியே பொருத்தப்பட்டிருக்கும் புதிய சாதனம், உட்புற அமைப்பில் நோய்க் கிருமிகளைத் தெளிப்பதன் மூலம் சோதிக்கப்பட்டது, யாரோ பேசுவது அல்லது இருமுவது போன்ற சூழ்நிலையை உருவகப்படுத்துகிறது.

தும்மலின் போது உற்பத்தி செய்யப்படும் அளவை விட 70 முதல் 560 மடங்கு குறைவான திரவத்திற்கு சென்சார்கள் பதிலளித்தன, தொலைபேசி போன்ற வயர்லெஸ் சாதனங்களுக்கு விழிப்பூட்டல்களை அனுப்புகிறது.

நோய்த்தொற்றின் ஆபத்து அதிகமாக இருக்கும் மூடப்பட்ட இடங்களில் சாதனம் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது என்றும், சாதனத்தின் கண்டறிதல் நேரம் மற்றும் உணர்திறன் ஆகியவற்றைக் குறைப்பதில் பணிபுரிந்து வருவதாகவும், தேவைப்பட்டால் வெவ்வேறு வைரஸ்களுக்கு இது கட்டமைக்கப்படலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். துணைக்கருவியின் விலை மதிப்பீடுகள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# இந்துக்கோயில் தாக்கப்பட்டமைக்கு இங்கிலாந்து இந்திய தூதரகம் கண்டனம்!



இங்கிலாந்தில், இந்து கோயில் மீது தாக்குதல் நடந்தப்பட்டதற்கு லண்டனில் உள்ள இந்திய தூதரகம் கண்டனம் தெரிவித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்க கோரி போலீசாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இங்கிலாந்தின் லெய்செஸ்டர் நகரில் உள்ள இந்து கோயிலின் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், அதனை தொடர்ந்து கலவரம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்து கோயிலுக்கு வெளியே இருந்த கொடியை எதிர்தரப்பினர் அகற்றியது தொடர்பாக இந்த கலவரம் ஏற்பட்டதாக லெய்செஸ்டர் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

கலவரத்திற்கு தொடர்புடைய 15-க்கும் மேற்பட்டோர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சமூக வலைதளங்களில் பகிரப்பட்டுள்ள சில வீடியோக்களில், இந்து அமைப்பை சேர்ந்த சிலர் ஜெய் ஸ்ரீராம் கோஷத்தை எழுப்புகின்றனர். மேலும், அவர்கள் கோயில் தாக்கப்பட்டதை தொடர்ந்து அங்கிருக்கும் இஸ்லாமியர்களுக்கு சொந்தமான பொருள்களையும் அடித்து உடைப்பதாக கூறப்படுகிறது.

இருதரப்பினர் இடையேயும் காவல் துறையினர் சமாதானப் பேச்சுவார்த்தை மேற்கொண்டதாக தெரிகிறது. மேலும், வடக்கு லெய்செஸ்டர் பகுதியில் காவலை பலப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள காவல்துறை, இதுபோன்ற வன்முறை சம்பவங்களை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும் கூறியுள்ளது.

இதனையடுத்து, லண்டனில் உள்ள இந்திய தூதரகம், இந்து கோயில் தாக்கப்பட்டதற்கு தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. இது குறித்து இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், இந்த சம்பவம் குறித்து, நாங்கள் இங்கிலாந்து அதிகாரிகளிடம் கடுமையான முறையில் எடுத்துக் கூறியுள்ளோம். இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறும் அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளோம் என குறிப்பிடப்பட்டுள்ளது

# அமேரிக்க- தென்கோரிய அதிபர்கள் நியூயோர்க்கில் சந்திப்பு

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகளின் 77வது மாநாட்டின் போது தென் கொரிய அதிபர் யூன் சுக்-யோல் மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஆகியோர் தனிச் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்க அதிபர் பைடன் கொரோனாவிற்கெதிரான தடையினை முற்றும் அமெரிக்காவில் இருந்து நீக்கியுள்ள நிலையில் கொரோனா அமெரிக்காவிற்கு ஆபத்தான தொற்று நோய் இல்லை எனவும் கொரோவை அமெரிக்கா மேற்கொண்டு விட்டது என்றும் உத்தியோகபூர்வ செய்தியை அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் கோரோனாவின் தாக்கம் தென் கொரியாவில் தொடர்ந்தும் காணப்பட்டு வரும் நிலையில் தென் கொரியாவிற்கு தேவையான மருத்துவ உதவிகள் மற்றும் கொரோவை கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை செயற்பாடுகள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளதாகவும் அத்துடன் கொரிய தீபகற்பத்தில் தென் கொரியா சந்தித்து வரும் வட கொரியாவின் அமையற்ற போக்கு குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.





## தமிழ்நாட்டு செய்திகள்
### வணக்கம் தமிழகம்

# திமுகவிலிருந்து விலகினார் சுப்புலட்சுமி ஜெகதீசன்
## 45 ஆண்டுகால அரசியல் பயணம் நிறைவு



திமுக துணைப் பொதுச் செயலர் சுப்புலட்சுமி ஜெகதீசன், தனது 45 ஆண்டுகால அரசியல் பயணத்தை நிறைவு செய்வதாக அறிவித்துள்ளார். தலைமை மீதான அதிருப்தியே அவர் திமுகவிலிருந்து விலகக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிட்ட விலகல் கடிதத்தில், ‘திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பொறுப்பேற்று, அரசுப் பணிகளையும், கட்சிப்பணிகளையும் நாடே பாராட்டும் வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். இது எனக்கு மிகுந்த மன நிறைவைத் தருகிறது. இந்த நிறைவோடு, அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும் என்ற நீண்டநாள் விருப்பத்தின் அடிப்படையில், பதவியில் இருந்தும், கட்சியில் இருந்தும் விலகுவதாக எனது கடிதத்தை தலைவருக்கு அனுப்பிவிட்டேன்’ என்று தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் உள்ள பள்ளியில் உதவி தலைமை ஆசிரியையாகப் பணியாற்றிய சுப்புலட்சுமி ஜெகதீசன், பணியை ராஜினாமா செய்துவிட்டு, அதிமுகவில் இணைந்தார். 1977-ல் மொடக்குறிச்சி தொகுதியில் வென்று அரசியல் பயணத்தைத் தொடங்கிய அவர், அப்போதைய அதிமுக அமைச்சரவையில் இடம் பெற்றார். பின்னர், 1980-ல் திமுகவில் இணைந்தார்.

தொடர்ந்து, ஈரோடு, மொடக்குறிச்சி, வெள்ளக்கோவில் சட்டப்பேரவை தொகுதிகள் மற்றும் பழனி, திருச்செங்கோடு மக்களவைத் தொகுதிகளில் திமுக சார்பில் போட்டியிட்ட சுப்புலட்சுமி ஜெகதீசன், மத்திய, மாநில அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார்.

இவரது கணவர் ஜெகதீசன், கருணாநிதியின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக சுப்புலட்சுமி மற்றும் ஜெகதீசன் இருவரும் 1992-ல் தடா சட்டத்தில் கைதாகினர். 300 நாட்கள் சிறையில் இருந்த இருவரும், 1998-ல் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

2016 சட்டப்பேரவைத் தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. 2021-ல் மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட்டார். ஆனால், 281 வாக்குகள் வித்தியாசத்தில் பாஜக வேட்பாளர் சி.சரஸ்வதியிடம் அவர் தோல்வியடைந்தார். இதன் தொடர்ச்சி அவரை அரசியலில் இருந்து விலகும் நிலைக்குத் தள்ளிவிட்டது. பதவியில் இருந்தும், கட்சியில் இருந்தும் விலகுவதாக கடந்த ஆகஸ்ட் 29-ம் தேதியே முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடிதம் அனுப்பிவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சுப்புலட்சுமியின் ஆதரவாளர்கள் கூறும்போது, "மொடக்குறிச்சியில் உயர்மின் கோபுரம் உள்ளிட்ட பிரச்சினைகளில் முன்னின்று போராடியவர் சுப்புலட்சுமி என்பதால், பாஜக வேட்பாளர் சரஸ்வதியை எளிதாக வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவரால் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் எனக் கருதிய மாவட்ட நிர்வாகி, தேர்தல் பணி செய்யவிடாமல் கட்சி நிர்வாகிகளைத் தடுத்தார். ஒன்றியச் செயலர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. தேர்தல் பொறுப்பாளர் காந்திசெல்வனும் இதைக் கண்டுகொள்ளவில்லை.

இதனால் தேர்தலில் தோல்வியடைந்த சுப்புலட்சுமி, இது குறித்து தலைமையிடம் புகார் அளித்தார். திமுக மொடக்குறிச்சி ஒன்றியச் செயலர் குணசேகரன், கொடுமுடி ஒன்றியச் செயலர் சின்னசாமி ஆகியோரது செயல்பாடுகள் குறித்து ஆதாரத்துடன் புகார் அளித்தும், தலைமை கண்டுகொள்ளவில்லை. பின்னர் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சிகளில் அவர் ஓரம்கட்டப்பட்டார். உட்கட்சித் தேர்தலின்போதும் சுப்புலட்சுமி தெரிவித்த புகார்களுக்கு தலைமை செவிமடுக்கவில்லை. அவர் குறிப்பிட்ட சிலருக்கு பதவி வழங்கப்படவில்லை. இதனாலேயே அவர் கட்சியிலிருந்து விலகியுள்ளார்’ என்றனர்.

இதற்கிடையில், அவரை கடந்த 19-ம் தேதி திமுக பொதுச்செயலர் துரைமுருகன் சமாதானப்படுத்தியுள்ளார். தொடர்ந்து, ஆர்.எஸ்.பாரதி உள்ளிட்டோரும் பேசியுள்ளனர். ஆனால், கட்சித் தலைவரான ஸ்டாலினிடம் இருந்து அழைப்பு வரவில்லை.

நேற்று முன்தினம் திமுக அலுவலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்டச் செயலர் தேர்தல் மற்றும் சுப்புலட்சுமி ஜெகதீசன் பதவி விலகல் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. அதில், அடுத்து யாரை நியமிக்கலாம் என்பது குறித்தும் பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த தகவலை அறிந்த பின்னரே, கட்சியிலிருந்து விலகுவதாக சுப்புலட்சுமி நேற்று வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

# மியான்மரில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்கக் கோரி பிரதமருக்கு ஸ்டாலின் கடிதம்



மியான்மர் நாட்டில் சிக்கித் தவிக்கும் 50 தமிழர்கள் உட்பட சுமார் 300 இந்தியர்களை விடுவித்து தாய் நாட்டிற்கு அழைத்துவர தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில், "மியான்மர் நாட்டில் சுமார் 50 தமிழர்கள் உட்பட சுமார் 300 இந்தியர்கள் கடுமையான இன்னல்களுக்கு ஆட்பட்டிருப்பதாக மாநில அரசுக்கு தகவல் கிடைத்துள்ளது என்பதை பிரதமரின் உடனடி கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் ஆரம்பத்தில் தனியார் ஆட்சேர்ப்பு முகமைகள் மூலம் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான வேலைகளுக்காக தாய்லாந்து நாட்டிற்குச் சென்றுள்ளனர்.

ஆன்லைனில் சட்டவிரோத வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு அவர்கள் தாய்லாந்தில் இருந்து மியான்மருக்கு கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் அத்தகைய சட்டவிரோத வேலைகளை செய்ய மறுத்ததால் வேலையளிப்போரால் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள் என்று தகவல்கள் வருவதாகவும் முதல்வர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் 17 தமிழர்களுடன் மாநில அரசு தொடர்பில் உள்ளதாகவும், அவர்களை விரைவாக மீட்பதற்கு அரசின் உதவியை நாடுகின்றனர் என்றும், மியான்மரில் சட்டவிரோதமாக சிறைப்பிடிக்கப்பட்டுள்ள நமது குடிமக்களின் அவலநிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக அவர்களை மீட்பதற்கும், பாதுகாப்பாக தாயகத்திற்கு திரும்ப அழைத்துவரவும், மியான்மரில் உள்ள தூதரகத்திற்கு இப்பிரச்சினை குறித்து விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வெளியுறவு அமைச்சகத்திற்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கவேண்டும். இது தொடர்பாக பிரதமரின் அவசர தலையீட்டை கோருகிறேன்" என்று முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா காலமானார்
## நான்கு முதல்வர்களிடம் அரசியல் பணியாற்றியவர்



உடல்நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா புதன்கிழமை மதியம் 1 மணியளவில் காலமானார். அவருக்கு வயது 77.

மதுரை மாவட்டம் சேடபட்டியை சேர்ந்தவர் சேடப்பட்டி ரா.முத்தையா. இவர் 1945-ம் ஆண்டு அக்டோபர் 4-ம் தேதி பிறந்தவர். தனது கடைசி காலத்தில் திமுகவில் இருந்து வந்தார். இவரது மகன் மணிமாறன், மதுரை புறநகர் தெற்கு மாவட்ட திமுக செயலாளராக உள்ளார்.

சேடப்பட்டி ரா.முத்தையா கடந்த 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது தமிழக சட்டப்பேரவைத் தலைவராக இருந்தவர். 2000 வரை அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும், அவருக்கு மிக நெருக்கமாக இருந்தவர். அதனால், ஜெயலலிதா அதிமுக பொருளாராக சேடப்பட்டி ரா.முத்தையாவை நியமித்து அழகுப் பார்த்தார்.

அதன்பிறகு ஜெயலலிதாவுடன் ஏற்பட்ட மனகசப்பு காரணமாக சிறிது காலம் தீவிர அரசியலில் ஈடுபடாமல் இருந்து வந்தார். பின், சென்னை அண்ணா அறிவாலயத்திற்கு தனது ஆதரவாளர்களுடன் வந்த சேடப்பட்டி முத்தையா, திமுக தலைவர் கருணாநிதியை சந்தித்து திமுகவில் இணைந்தார்.

சேடப்பட்டி சட்டமன்றத் தொகுதியிலிருந்து நான்கு முறை தமிழகச் சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதனாலேயே இவரை அதிமுகவினரும், பொது மக்களும் "சேடப்பட்டியார்" என்று அழைத்து வந்தனர். அதிமுக சார்பில் மக்களவைக்கு பெரியகுளம் தொகுதியிலிருந்து இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் எம்.பியாக இருந்தவர். 1998-ஆம் ஆண்டு அடல் பிகாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சராக பணியாற்றியுள்ளார்.

கடந்த 8-ம் தேதி மதுரை வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் சிகிச்சைப் பெற்று வந்த சேடப்பட்டி ரா.முத்தையாவை சந்தித்து நலம் விசாரித்தார். மருத்துவர்களிடம் அவருக்கு அளித்த சிகிச்சை விவரங்களை கேட்டறிந்தார். இந்நிலையில், புதன்கிழமை மதியம் 1 மணியளவில் சிகிச்சை பலனளிக்காமல் சேடப்பட்டி ரா.முத்தையா காலமானார்.

# ராசாவுக்கு எதிராக பாஜக சார்பில் மக்களிடம் கையெழுத்து இயக்கம்
## அண்ணாமலை தகவல்

தமிழகத்தில் திமுக தான் மத அரசியல் செய்கிறது, பாஜக அல்ல என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூறினார்.

மதுரையில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியது:

திமுக எம்.பி. ஆ.ராசாவின் கருத்து தமிழக மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவரது நீலகிரி தொகுதியில் 90 சதவீத மக்கள் கடையடைப்பு போராட்டம் நடத்தி எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அனைத்து மதத்தினரும் ஆ.ராசாவை கண்டித்து வருகின்றனர். ஆனால், வெந்தப் புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அவர் நான் பேசியது சரிதான் என தொடர்ந்து பேசி வருகிறார். இது இந்துக்களை குறிப்பாக இந்து சமய பெண்களை மனதை புண்படுத்தி



வருகிறது. திமுகவினர் இந்துக்கள் குறித்து சர்ச்சை கருத்துக்களை பேசுவது புதிதல்ல. இந்து சனாதான தர்மத்தை திரித்து, அதில் கூறப்பட்டுள்ள கருத்துகள் ஏதோ ஆகாத கருத்துக்கள் போல் பிரசாரம் செய்து மக்களின் எதிர்ப்பை சம்பாதித்து வருகின்றனர். அனைத்து மக்களும் இன்புற்று இருக்க வேண்டும், அனைத்து மக்களும் கடவுளை பார்க்கட்டும், அனைவருக்கும் மோட்சம் கிடைக்கட்டும், அனைவரும் நோய், நொடியில்லாமல் இருக்கட்டும் என்பதே சனாதன தர்மத்தின் முக்கிய குறிக்கோளாகும். 63 நாயன்மார்களில் 42 பேரும், 12 ஆழ்வார்களில் 10 பேர் பிராமணர்கள் அல்ல. இது திமுகவுக்கு தெரியாதா? கடவுளுக்கு இணையாக நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் வழிபட்டு வருகிறோம். இந்து மதம் சாதியை அடிப்படையாக கொண்டது அல்ல.

ஆ.ராசாவுக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்களை போலீஸார் கைது செய்து வருகின்றனர். திமுக தான் மத அரசியல் செய்து வருகிறது. பாஜக ஒருபோதும் மத அரசியல் செய்ததில்லை. ஆ.ராசாவுக்கு எதிராக பாஜக சார்பில் மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி, அதை குடியரசுத் தலைவருக்கும், ஆளுநருக்கும் அனுப்பி வைப்போம். தமிழகத்தின் பள்ளி மாணவர்களிடம் போதைப் பொருட்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. ராகுல் காந்தியின் யாத்திரையால் நாடாளுமன்றத் தேர்தலில் எந்த தாக்கமும் ஏற்படாது. ராகுல் யாத்திரையில் பிரிவினைவாத சக்திகளை சந்தித்து பேசி வருகிறார்.

சீமான் மாதம் தோறும் ஒரு பேச்சு பேசுகிறார். அவர் ஏன் இப்படி பேசுகிறார் என்பது எனக்கு புரியாத புதிராக உள்ளது. தமிழகத்தில் சாதிப் பாகுபாடு அதிகமாக உள்ளது. கர்நாடகாவை விட தமிழகத்தில் சாதிப் படுகொலைகள் அதிகளவில் நடைபெறுகிறது. குழந்தைகள் தேன் மிட்டாய் வாங்குவதில் கூட சாதிப் பாகுபாடு பார்க்கப்படுகிறது. சாதிய பாகுபாட்டை தடுப்பதில் திமுக அரசு தோல்வி அடைந்துள்ளது என்று அண்ணாமலை கூறினார்.

# சொத்து அறிவிப்புக் கொள்கையை அறிவித்தார் பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாகோப்



நீதித்துறை உறுப்பினர்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் தலைவர்கள் தங்கள் சொத்துகளை அறிவிக்க வேண்டும் என்ற புத்ராஜெயாவின் புதிய கொள்கைக்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

ஆனால் ஊழலைத் திறம்படக் கட்டுப்படுத்த இன்னும் மேலும் அதிக நடவடிக்கைகள் தேவை என்று எம்.பி.க்கள் கூறினர்.

உறுப்பினர்களுடைய மனைவி மற்றும் குழந்தைகளின் சொத்துக்களையும் உள்ளடக்கியதாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும், தவறான அறிவிப்புகள் குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று பாசிர் குடாங் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் கரீம் அழைப்பு விடுத்தார்.

மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் இணையதளத்தில் அறிவிப்புகளை வெளியிடுவதன் மூலம், அறிவிப்புகள் உண்மையா என்பதை பொதுமக்கள் உன்னிப்பாக ஆராய அனுமதிக்க வேண்டும் என்று பாசிர் குடாங் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் கரீம் வலியுறுத்தியுள்ளார். தனிப்பட்ட தரவு சம்பந்தப்படாத பிரகடனத்தின் சில பகுதிகள் ஆண்டு முழுவதும் பொதுமக்களால் அணுகப்பட வேண்டும் என்று லெம்பஹ் பாண்டாய் நாடாளுமன்ற உறுப்பினர் பாஹ்மி பாசில் கூறினார்.

ஆண்டுதோறும் இல்லாவிட்டாலும், ஒருவர் பதவியை ஏற்கும் முன், அதன் நடுவில், பதவிக் காலம் முடிந்ததும் இந்த அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

பெட்டாலிங் ஜெயா எம்பி மரியா சின் அப்துல்லா கூறுகையில், நிர்வாக அதிகாரம் கொண்ட உயர் பதவிகளில் உள்ள எவருக்கும் சொத்துக்கள் அல்லது திட்டங்களை அங்கீகரிக்கவும் பெறவும் சொத்து அறிவிப்புகள் தேவை.

எம்.பி.க்கள் மற்றும் செனட்டர்களும் சொத்து அறிவிப்புகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்று அவர் கூறினார், ஏனெனில் எம்.பி.க்கள், குறிப்பாக அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் சொத்துக்களை அறிவிக்கவில்லை.

சொத்து அறிவிப்புக் கொள்கையை பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாகோப் இன்று அறிவித்தார், அவர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய நெறிமுறைக் குறியீடும் அறிமுகப்படுத்தப்படும் என்று கூறினார்.

ஊழலைத் தடுப்பதற்காக உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளின் இடமாற்றம் மற்றும் சின்ன நெப்போலியன்களின் இருப்பை மேற்பார்வையிட ஒரு குழுவை அமைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.




# பத்தாயிரம் இலங்கைத்தொழிலாளர்களை பணிக்கமர்த்த மலேசிய அமைச்சரவை அனுமதி!

## தொழில் தருநர்களின் ஒத்துழைப்பை நாடுகிறார் மனிதவள அமைச்சர் சரவணன்

இலங்கையில் நிலவும் தீவிரமான பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணும் பொருட்டு இலங்கை அரசாங்கத்தால் மலேசியாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இலங்கையில் இருந்து 10,000 புலம்பெயர்ந்த பணியாளர்களை அழைப்பதற்கு மலேசிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக மலேசியாவின் மனிதவள அமைச்சர் எம்.சரவணன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இன்றைய தினம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் அவர்



இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள இலங்கைக்கு உதவுவதற்கான எமது அரசாங்கத்தின் முயற்சிகளில், இலங்கைத் தொழிலாளர்களை உள்வாங்குவதற்கான தீர்மானமும் ஒன்றாகும்.

இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை கொண்டு சம்பந்தப்பட்ட துறைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் அரசாங்கத்தின் நோக்கங்களை ஆதரிக்குமாறு, தொழில் தருநர்களையும், வணிகங்களையும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை பணியாளர்களை பணியமர்த்துவதில் ஆர்வமுள்ள தொழில்தருநர்கள் அமைச்சின் புலம்பெயர் தொழிலாளர் முகாமைத்துவ நிலையம் மற்றும் நாட்டின் தொழிலாளர் திணைக்களம் என்பவற்றை தொடர்பு கொள்ள முடியும் என தெரிவித்தார.

# திறன் மேம்பாட்டு துறையின் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்பை துரிதப்படுத்தும் புரிந்துணர்வு உடன்படிக்கை மனிதவள அமைச்சரால் கைச்சாத்து

மனிதவள அமைச்சின் கீழ் இயங்கும் சமூகப் பாதுகாப்பு அமைப்பான பெர்கேசோ (SOCSO) மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது.

குறிப்பாக திறன் மேம்பாட்டுத் துறையின் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை எளிதாக்குவதற்கும் விரைவுபடுத்துவதற்கும் இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பெர்கேசோவின் MyFutureJobs இணையத்தளம் வழி இந்த ஆண்டில் இதுவரை 133,000 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




# அரசாங்கம் தோல்வியுற்றால் முகைதீனும் பொறுப்பு ஏற்க வேண்டும்

## இஸ்மாயில் தெரிவிப்பு

அரசாங்கத்தின் எந்தவொரு குறைபாடுகளுக்கும் இதற்க்கு முன்பு பொறுப்பில் இருந்த தனது முன்னோடியான முகைதின் யாசின் தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று பிரதம மந்திரி இஸ்மாயில் சப்ரி யாக்கப் கூறியுள்ளார்.

அரசாங்கம் நாட்டை நிர்வகிக்கத் தவறிவிட்டதாகக் கூறப்பட்டால், முகைதின் அரசாங்கத்தின் ஆலோசகராகப் பொறுப்பேற்கத் தவறிவிட்டார் என்று அர்த்தம் என்று இஸ்மாயில் கூறினார்.

பொருளாதார விவகார அமைச்சர் முஸ்தபா முகமது பெர்சத்துவைச் சேர்ந்தவர் பொருளாதாரத்தை நிர்வகித்து வருகிறார், மேலும் எங்களிடம் தேசிய மீட்பு கவுன்சில் உள்ளது, இது முகைதின் தலைமையில் உள்ளது.

எம்பிஎன் அரசாங்கத்திற்கு அறிவுறுத்துகிறது. எனவே அரசாங்கம் தோல்வியுற்றால், எம்பிஎன் உட்பட அனைவரும் தோல்வியடைந்துள்ளனர் என்று அர்த்தம், என்று தேசிய எரிசக்தி கொள்கையை அறிமுகப்படுத்திய பின்னர் கூறினார்.

இஸ்மாயிலுக்கு பொருளாதாரத்தையும் நாட்டையும் சரியாக நிர்வகிக்க முடியாவிட்டால் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று முஹைடின் முகநூல் பதிவில் வெளியிட்டார், அதனைத் தொடர்ந்து இஸ்மாயில் இவ்வாறாக பதிலளித்தார் .

முகைதின் அறிக்கையை தான் இன்னும் முழுமையாக படிக்கவில்லை, எனவே முன்னாள் பிரதமர் கூற முயற்சிக்கும் உண்மையான செய்தியை தன்னால் விவரிக்க முடியவில்லை என்று இஸ்மாயில் கூறினார்.

ஆ40 வருமானக் குழுவானது ஆ60க்கு திறம்பட மாறிய நிலையில், ரிங்கிட் வீழ்ச்சி, அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் தற்போதைய பொருளாதாரச் சூழல் ஆகியவை மலேசியர்களை கடுமையாகப் பாதித்துள்ளதாகவும் பெர்சத்து தலைவர் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டார்.

பாரிசான் நேஷனல் இந்த ஆண்டு மீண்டும் மீண்டும் நாடாளுமன்றத்தை கலைக்குமாறு இஸ்மாயிலை வற்புறுத்தி வருகிறது, அந்த நிலைக்கு தான் இன்னும் வரவில்லை என்று பெரிக்கத்தான் நேஷனல் தலைவரான முஹைடின் கூறினார்.

இருப்பினும், பிரதமர் பொருளாதாரத்தையும் நாட்டையும் சிறப்பாக நிர்வகிக்கத் தவறினால், பொதுத் தேர்தல் நடத்தப்படுவதே சிறந்தது என்று நான் நினைக்கிறேன், அதனால் திறமையான மற்றும் ஊழல் இல்லாத புதிய அரசாங்கத்தை மக்களால் தேர்ந்தெடுக்க முடியும்,



என்று அவர் கூறினார். .

கடந்த வாரம், இஸ்மாயில் அடுத்த பொதுத் தேர்தலுக்கு இந்த ஆண்டு நடைபெற இன்னும் நேரம் உள்ளது என்றார்.

இது அனைத்தும் அம்னோவின் முதல் ஐந்து நபர்களைச் சார்ந்தது என்று அவர் கூறினார், இது கட்சியின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் மூன்று துணைத் தலைவர்களைக் குறிக்கிறது, அவர்களில் ஒருவர் இஸ்மாயில்.

அம்னோவின் முக்கிய ஐந்து தலைவர்கள் செப்டம்பர் 30 அன்று கூடி வரவிருக்கும் தேர்தல்கள் குறித்து ஆலோசிக்க உள்ளனர்.

அரசாங்கத்தின் பதவிக்காலம் அடுத்த ஜூலையில் முடிவடைகிறது மற்றும் 2023 செப்டம்பர் மத்தியில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இருப்பினும், சில அம்னோ தலைவர்களும் அதன் பெரும்பாலான பிரிவுகளும் கடந்த மார்ச் மாதம் ஜொகூர் மற்றும் நவம்பர் மலக்காவில் நடந்த மாநிலத் தேர்தல்களில் பிஎன் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்த ஆண்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துள்ளன.

இந்த வார அமைச்சரவை கூட்டத்தில் GE15 -க்கான தேதி விவாதிக்கப்படலாம்

GE15 தொடர்பான முன்னேற்றங்கள் பற்றி கேட்கப்பட்டபோது, அம்னோவின் முதல் ஐந்து இடத்திற்கு கொண்டு வருவதற்கு முன், புதன்கிழமைய அமைச்சரவை கூட்டத்தில் இந்த விஷயம் விவாதிக்கப்படலாம் என்று இஸ்மாயில் கூறினார்.

GE15 விரைவில் நடத்தப்பட வேண்டும் என்று முஹைடின் கூறியதால் , கூட்டத்தில் பெர்சத்து, எககு, கஅகு மற்றும் அம்னோவின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் காரணத்தால் அமைச்சரவையில் இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அம்னோவின் முதல் ஐந்து நபர்கள் செப்டம்பர் 30 அன்று வரவிருக்கும் வாக்கெடுப்புகள் பற்றி விவாதிக்க திட்டமிட்டபடி கூடுவார்கள் என்பதையும் இஸ்மாயில் உறுதிப்படுத்தினார்.

# மலேசியா – இந்தோனேசியா எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்; ஓங்கிலி



மலேசியா-இந்தோனேசியா எல்லைகளில் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

அண்டை நாடு தனது தலைநகரை போர்னியோ தீவின் கிழக்கு கடற்கரைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைக்கு முன்னதாகத் தீர்க்கப்பட வேண்டும் மற்றும் பலப்படுத்தப்பட வேண்டும்.

பிரதமர்துறையின் (சபா மற்றும் சரவாக் விவகாரங்கள்) அமைச்சர் மாக்ஸிமஸ் ஓங்கிலி(Maximus Ongkili), மலேசிய பாதுகாப்புப் படைகள் இந்த நடவடிக்கையின் தாக்கம் மற்றும் விளைவுகளை எதிர்பார்த்துள்ளன என்று கூறினார், இதனால் நேரம் வரும்போது எல்லைகளில் சோதனைச் சாவடிகளைத் தயாரிக்க அதிக வசதிகள் மற்றும் கூடுதல் மனிதவளம் தேவைப்படுகிறது. குடியேற்றம்(immigration), போலீஸ் மற்றும் சரவாக் மாநில பாதுகாப்பு கவுன்சில் ஆகியவற்றின் பாதுகாப்பு விளக்கங்களைக் கேட்டபிறகு, தாமதமான திட்டங்கள், போதுமான நிதி மற்றும் மனிதவள பற்றாக்குறை ஆகியவை எல்லைகளில் பாதுகாப்புப் படைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் அடங்கும் என்பதை நாங்கள் கண்டறிந்தோம், மேலும் அவர்களின் தற்போதைய சவால்களுடன், என்று அவர் கூறினார்.

பிரதமர் துறை அமைச்சர் மாக்சிமஸ் ஓங்கிலி கூச்சிங்கிற்கு அருகில் உள்ள தெபேடுவில்(Tebedu) உள்ள மலேசியா-இந்தோனேசியா சுங்கம், குடியேற்றம், தனிமைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு எல்லை சோதனைச் சாவடிக்கு வருகை தந்தபின்னர் இன்று வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், இந்தோனேசிய அரசாங்கம் பாதுகாப்பு எல்லைகளில், அவற்றின் மூலதன நடவடிக்கைக்கு முன்னதாகச் செயல்பட்டுள்ளது என்றும், மலேசிய அதிகாரிகள் உடனடியாகத் தங்கள் பங்கைச் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த விவகாரங்கள் உள்துறை அமைச்சகத்திடம் எடுத்துரைக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# காலம் ஆகினார் கண்களுக்குள் நீங்காமல்!

## மலேசிய இந்திய காங்கிரசின் முன்னாள் தலைவர் அமரர் துன்.ச.சாமிவேலு அவர்களின் நினைவலைகள்

துன் சாமிவேலு மலேசிய அரசியலில் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக குறிப்பிடத்தக்க சாதனைகளையும், சேவைகளையும் வழங்கிய பெருமை உடையவர்.

1974-ஆம் ஆண்டில் சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாமிவேலு தொடர்ச்சியாக 34 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சாதனை புரிந்தவர்.

மஇகாவில் பல்வேறு பதவிகளை வகித்து கட்டம் கட்டமாக தனக்கென ஆதரவுத் தளத்தை வளர்த்துக்கொண்டார்.

அவரின் போராட்ட குணமும் துணிச்சலும் அனைவரும் அறிந்தது. 1965-ஆம் ஆண்டு இந்தோனிசியாவுக்கு எதிரான முற்றுகைப் போராட்டத்தில் தேசிய முன்னணியினரோடு இணைந்து களப் போராட்டம் நடத்தியவர் சாமிவேலு. அப்போது கொடிக் கம்பத்தில் ஏறி இந்தோனிசியக் கொடியைக் கீழிறக்கிய அவரின் துணிச்சல் பலராலும் இன்று வரை நினைவுக்கூறப்படுகிறது.

கட்சியிலும் தனக்கு எதிராக அரசியல் வியூகங்கள் வடிவமைக்கப்பட்ட போதும், அதனைத் தனிமனிதனாக கடுமையாக எதிர்த்துப் போராடி, அந்த எதிர்ப்பலைகளில் நீந்தி வெற்றி பெற்றவர் அவர்.

கடந்த 1979-ஆம் ஆண்டில் மஇகாவின் 6-வது தேசியத் தலைவராகப் பதவியேற்றார் துன் சாமிவேலு. டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் அகால மரணத்தால் அப்போது மஇகாவின் தேசியத்துணைத் தலைவராக இருந்த சாமிவேலு இடைக்காலத் தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

கால ஓட்டத்தில் 4 பிரதமர்களின் கீழ் 30 ஆண்டுகளுக்கும் மேலாக அமைச்சராக நீடித்ததோடு பல்வேறு சாதனைகளையும் நிகழ்த்தியவராக சாமிவேலு திகழ்கிறார்.

பொதுப் பணி அமைச்சுப் பொறுப்புக்குப் பின்னர் சில ஆண்டுகள் தொலைத் தொடர்பு அமைச்சராகவும் பதவி வகித்தார். மஇகா தலைவர் பொறுப்பிலிருந்தும், அமைச்சுப் பொறுப்புகளில் இருந்து விலகிய பின்னரும் அவரை தெற்காசிய நாடுகளுக்கான சிறப்புத் தூதராக அமைச்சர் அந்தஸ்துடன் நியமித்தது மலேசிய அரசாங்கம்.

அவரின் கடந்த கால சேவைகள், அனுபவங்களின் அடிப்படையில் இந்தப் புதிய பொறுப்பு அவருக்காகவே உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டது.

அதிலும் சிறப்பாகப் பணியாற்றித் தனது தனித்துவ முத்திரையைப் பதித்தார் சாமிவேலு.

### அமைச்சராக சாதனைகள்

பொதுப்பணி அமைச்சராக அவர் பதவி வகித்த காலத்தில் நாட்டின் போக்குவரத்து இணைப்புகளை வலுப்படுத்தும் அப்போதைய பிரதமர் துன் மகாதீரின் வியூகங்களையும், திட்டங்களையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தியவர் சாமிவேலு.

பல நெடுஞ்சாலைத் திட்டங்கள், வடக்கு தெற்கு நெடுஞ்சாலை, பினாங்கு பாலம் போன்றவை சாமிவேலுவின் மேற்பார்வையில் கட்டப்பட்டவை.

அதற்காக, உலக மாமனிதர் என்ற பட்டத்தையும் அனைத்துலக அரங்கில் பெற்றவர் சாமிவேலு.

அமைச்சுப் பொறுப்பு இல்லாத நாடாளுமன்ற பின்இருக்கை உறுப்பினராக செயல்பட்டபோதும், துணையமைச்சராகவும் அமைச்சராகவும் செயல்பட்டபோதும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கேள்விக் கணைகளை நேரடியாக எதிர்கொண்



டவர் சாமிவேலு. எந்த சூழ்நிலையானாலும், எந்தக் கேள்வியானாலும் அதனைத் தனது பேச்சுத் திறனாலும், வாதத் திறமையாலும் எதிர்கொண்டு முறியடித்தவர்.

பின் இருக்கை உறுப்பினராக செயல்பட்ட போதும், துணையமைச்சராகவும் அமைச்சராகவும் செயல்பட்டபோதும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கேள்விக் கணைகளை நேரடியாக எதிர்கொண்டவர் சாமிவேலு. எந்த சூழ்நிலையானாலும், எந்தக் கேள்வியானாலும் அதனைத் தனது பேச்சுத் திறனாலும், வாதத் திறமையாலும் எதிர்கொண்டு முறியடித்தவர்.

### இந்திய சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்

மலேசிய இந்திய சமூகத்தின் தானைத் தலைவராகச் செயல்பட்ட சாமிவேலு, கல்வி மேம்பாட்டின் மூலமே இந்திய சமூகம் வலிமை பெறும், வளர்ச்சி பெறும் என்பதை வலியுறுத்தி வந்தார்.

அதற்கேற்ப, பெட்டாலிங் ஜெயாவில் இயங்கி வந்த வாண்டோ கல்லூரியை வாங்கினார். ஏற்கனவே, மஇகா உரிமை கொண்டிருந்த டேஃப் கல்லூரியை உருமாற்றி அமைத்தார்.

எம்.ஐ.இ.டி என்ற கல்வி அறவாரியத்தை உருவாக்கினார். அதன் மூலம் இன்று வரை மில்லியன் கணக்கான ரிங்கிட் வசதி குறைந்த மாணவர்களுக்கு வாரி வழங்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, உலகத்திலேயே தமிழர்களுக்காக, தமிழர்கள் முன்னின்று உருவாக்கிய முதல் பல்கலைக்கழகமான ஏய்ம்ஸ்ட் மருத்துவப் பல்கலைக்கழகத்தையும் சாமிவேலு நிர்மாணித்தார்.

இன்று அந்தப் பல்கலைக் கழகம் மீதான அனைத்துக் கடன்களும் முழுமையாகச் செலுத்தப்பட்டு, சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

இதுவரையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஏய்ம்ஸ்ட் பல்கலைக் கழகத்திலிருந்து உருவாகி பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி வருகிறார்கள். குறிப்பாக இதுவரையில் ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்கள் மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்று நாடளாவிய நிலையில் பணியாற்றி வருவதற்கும் ஏய்ம்ஸ்ட் வழி வகுத்துள்ளது.

கேபிஜே என்ற கூட்டுறவுக் கழகத்தை நிறுவி நாட்டின் பல பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்களையும், நில மேம்பாட்டுத் திட்டங்களையும் உருவாக்கியவர் சாமிவேலு.

மாணவர்களின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு அவர்களின் கல்வித் தேவைக்கான கூட்டுறவுக் கழகமாக கோப் டிடெக் என்ற அமைப்பையும் உருவாக்கினார் சாமிவேலு.

### மஇகாவைக் கட்டுக் கோப்பாக வழிநடத்தியவர்

எத்தனையோ பிரச்சனைகள், சவால்களுக்கு இடையிலும் மஇகா தேசியத் தலைவராக, கட்சியை வலிமையோடும், கட்டுக் கோப்புடனும் திறம்பட வழிநடத்தியவர் சாமிவேலு.

எதிர்க்கட்சிகள் பெருகிய போதிலும், இந்தியர்கள் பலர் எதிர்க்கட்சிகளில் இணைந்து அரசியல் பணியாற்றி வந்தபோதும், மஇகாவைத் தொடர்ந்து சிறந்த கட்டமைப்பைக் கொண்ட கட்சியாக, தொகுதி ரீதியாக வளர்த்தெடுத்ததில் சாமிவேலு முக்கியப் பங்காற்றினார்.

சாதாரண மக்களோடும், அடிமட்ட உறுப்பினர்களோடும் எப்போதும் தொடர்பில் இருந்த தலைவர் சாமிவேலு.

சாதாரணத் தொண்டனின் இல்லத் திருமணமானாலும் சரி, அவனுக்கோ அவன் குடும்பத்துக்கோ அசம்பாவிதம் ஏதும் நிகழ்ந்தாலோ சரி, அதில் நேரடியாகக் கலந்து கொண்டு நலம் விசாரிக்கும் பண்பு கொண்டவர்.

அதே போல எங்கு பிரச்சனைகள் நேர்ந்தாலும் அதை அங்கேயே சென்று எதிர்கொண்டு தீர்த்து வைக்கும் துணிச்சலான தலைமைத்துவப் பண்பு அவரிடம் குடி கொண்டிருந்தது. உதாரணமாக, கம்போங் காந்தி வட்டாரத்தில் இந்தியர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டபோது அங்கு நேரடியாக சென்று பல நாட்கள் அந்த மக்களுடனேயே கலந்துரையாடி, அவர்களின் பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்த்து வைத்தவர் சாமிவேலு.

தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அளப்பரிய பங்களிப்பு வழங்கியவர்

தனது பதவிக் காலத்தில் தமிழ் இலக்கிய அமைப்புகளுக்கு பல்வேறு முனைகளில் நிதி உதவிகளையும், பங்களிப்பையும் வழங்கியவர் சாமிவேலு.

நூற்றுக் கணக்கான தமிழ் எழுத்தாளர்களின் நூல் வெளியீடுகளில் கலந்து கொண்டு கணிசமான நிதியைத் திரட்டிக் கொடுத்தவர்.

சாமிவேலுவுக்கே இருந்த தமிழ் ஆர்வமும் பற்றும் அனைவரும் அறிந்ததுதான். அதன் காரணமாக, தமிழ் இலக்கியப் பணிகளுக்கு வாரி வழங்கினார்.

மலேசியாவில் இரண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை தலைமையேற்று நடத்திக் காட்டிய பெருமைக்குரியவர் சாமிவேலு.

மறைந்த கலைஞர் கருணாநிதி மலேசியாவுக்கு மேற்கொண்ட ஒரே வருகை, சாமிவேலு தலைமைத்துவத்தில் 1987-இல் கோலாலம்பூரில் நடந்தேறிய 6-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் 9-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையும் கோலாலம்பூரில் 2015-இல் சாமிவேலுவே தலைமையேற்று நடத்திக் காட்டினார்.


### தமிழ்ப் பள்ளிகளின் வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்

நமது நாட்டில் தமிழ்ப் பள்ளிகள் நிலைத்திருக்கவும், மேம்பாடுகள் காணவும் பல முனைகளிலும் தீவிரமாகப் பாடுபட்டவர் சாமிவேலு.

பல தமிழ்ப் பள்ளிகள் அவரின் உதவியால் சீரமைக்கப்பட்டன. இடம் மாற்றம் கண்டன. புதிய கட்டடத் தொகுதிகளைப் பெற்றன.




## தமிழர் பண்பாட்டையும் கலைகளையும் வளர்க்க அயராது பாடுபட்டார்



மலேசிய இந்திய காங்கிரஸின் 76 ஆண்டு கால வரலாற்றில் 30 ஆண்டு காலம் அக்கட்சிக்கு தலைமை வகித்து கட்சியிலும், சமுதாயத்திலும் மாற்றம் ஏற்பட நாளும் உழைத்த நல்ல பெருமகனாக துன்சாமிவேல் அவர்கள் விளங்கினார். தமிழர் பண்பாட்டையும், தமிழர் கலையையும் வளர்ப்பதற்கு அவர் கடுமையாக உழைத்தார். உலக அளவில் மாபெரும் பல்கலைக்கழகமான ஏம்ஸ் என்பதை உருவாக்குவதில் தனது அயராத உழைப்பை கொடுத்தார். எல்லா நிலையிலும் சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்பட போராடினார். அதன் பிரதிபலனாக இன்று சமூகத்தில் ஏற்பட்ட பல மாற்றங்களை காணமுடிகிறது. அரசியலையும், தமிழையும் ஒருசேர கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும். நூல் வெளியீட்டுத் துறையில் புதிய அத்தியாயத்தை உருவாக்கினார். அவர் காலத்திலே எழுத்தாளர்களுக்கான மதிப்பும், சிறப்பும் கிடைத்தது. அத்தகைய பெருமகன் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் அவர் விட்டுச் சென்ற நல்ல பணிகளை சமுதாயம் தொடரவேண்டும். அவர் உருவாக்கிய ஏய்ம்ஸ் பல்கலைக்கழகம் என்றும் அவரை எம்மோடு இணைத்து வைத்திருக்கும்.

துன் . ஸ்ரீ . குமரன்
மூத்த தலைவர்களில் ஒருவர்
மலேசிய இந்திய காங்கிரஸ்

## இந்திய சமுதாயத்துக்காக தன் குரலை உயர்த்தியவர்



இந்திய சமுதாயத்திற்கு துன்.சாமியோட மரணம் பேரிழப்பே ஆகும். அவர் அமைச்சராக இருக்கும் காலத்தில் பல விடயங்களை இந்திய சமுதாயத்திற்காக செய்தார். இவர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வந்தார். அவருடன் பழகியவர்களுக்கு அவரது ஒழுக்கம், ஆளுமை, நேரந்தவறாமை, தலைமைத்துவ பண்பு போன்ற பல விடயங்கள் தெரிந்திருக்கும். சமூகத்தில் ஏற்பட்ட பல பிரச்சனைகளுக்கு தைரியமாக குரல் கொடுத்த ஒருவர். அவருடைய சேவைகளை நினைவுகூறி பலர் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தி வருகின்றனர். இந்நேரத்தில் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மேலவை உறுப்பினர், டாத்தோ.T.மோகன்

# காலம் ஆகினார் கண்களுக்குள் நீங்காமல்!

## மலேசிய இந்திய காங்கிரசின் முன்னாள் தலைவர் அமரர் துன்.ச.சாமிவேலு அவர்களின் நினைவலைகள்



**அமரர் துன்.ச.சாமிவேலு அவர்கள் நாட்டின் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக்கு அதிக பங்களிப்பு செய்துள்ளதோடு, இந்திய சமூகம் கல்வியில் சிறந்து விளங்க பல திட்டங்களையும் நடவடிக்கைகளயும் மேற்கொண்டார் என்பது குறிப்பிடதக்கது. இந்திய குடும்பத்தில் குறைந்தது ஒரு பட்டதாரியாவது இருக்க வேண்டும் என்ற இலக்குடன், மாஜு கல்வி மேம்பாட்டு கழகம் (MIED) -யை தோற்றுவித்து 15 ஆயிரதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கடனையும் உபகாரச் சமபளத்தையும் பெற வழி வகுத்தார் மேலும், சிரம்மானில், கூச்ஙூது கல்லூரி மற்றும் கெடா, Bedong-கில் ஏம்ஸ்ட் பல்கலைகழகத்தை நிறுவி, இந்தியர்கள் மத்தியில், கல்வி நிலையை மேம்படுத்தினார்.**

---

ஆர்ப்பரித்த ஆழி ஒன்று
அடங்கி போனதா..
தேர் சுமந்த ராஜபாட்டை
மடங்கிப் போனதா..?

அன்னைத்தமிழ் அமைச்சரவை
உறங்கிப் போனதா..
பொன்னைத் தரித்த பட்டுப்புடவை
சுருங்கிப் போனதா..?

ம.இ.காவின் அமுதசுரபி
வறண்டு போனதா - எங்கள்
மனம் கவர்ந்த புன்னகை பகல்
இருண்டு போனதா..?

தோற்றுப் போகாத் தடித்தத் திமிர்
வளைந்து போனதா - புயல்
காற்று மண்டலம்
காலனிடம் கலைந்து போனதா..?

சேர்த்து வைத்த சேமநிதி
தீர்ந்து போனதா-நாங்கள்
கோர்த்து வைத்த முத்துமாலை
அறுந்து போனதா..?

எதிரிக்கும் பிடித்த துணிச்சல்
உறைந்து போனதா -எந்த
எதிர்க்காற்றையும் எரிக்கும் தணல்
அணைந்து போனதா..?


பசியாற்றிய பச்சை வயல்
எரிந்து போனதா -பெரும்
படை நடத்திய செங்கோல் இன்று
உடைந்து போனதா..?

சிங்கநிகர் தங்கமலர்
மறைந்து போனதா- எங்கள்
பொங்கல் நிகர் சங்கக் கூட்டம்
முடிந்து போனது..?



**சிவா இராஜேந்திரன்**
**கல்வியமைச்சு மலேசியா**

## கல்வித்துறைக்கு பெரும் பங்காற்றியவர்



மறைந்ததுன்.சாமிவேலுடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். துன்சாமிவேல் அவர்கள் இறங்கமலாய தோட்டப்புறத்தில் 1936ம் ஆண்டு ஒரு தோட்டப் பாட்டாளியின் மகனாகப்பிறந்து தமிழ்ப்பள்ளியில் கல்வி கற்று படிப்படியாக உயர்ந்து இந் நாட்டின் மிகப்பெரிய ஆளுமையாக உருவாகினார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.மலேசிய அமைச்சரவையில் நீண்ட காலம் பணி செய்த அமைச்சர்களில் ஒருவராக திகழ்கின்றார்.அவரது 30 வருடத்திற்கு மேற்பட்ட தலைமையில் மலேசிய இந்தியர்களின் பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு பங்களிப்பை செய்துள்ளார்.குறிப்பாக கல்வித்துறைக்கு பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளார்.எடுத்துக்காட்டாக1980 -2010 வரை தமிழ்ப்பாடசாலைகளுக்கு பிரத்தியேக ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தினால் தனது சொந்த முயற்சியில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டார்.இன்று மாநிலங்கள் தோறும் இருக்கின்ற உதவி இயக்குனர்கள் அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்று அமைக்கப்பட்டமையும் இவருடைய காலகட்டத்திலே ஆகும்.உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு,உலகத்தமிழ் ஆசிரியர் மாநாடு போன்ற பல்வேறு மாநாடுகள் இங்கு நடப்பதற்கும் பெருமளவில் நிதியுதவியும், ஆலோசனையும் வழங்கினார்.மலேசிய,இந்திய மாணவர்களின் உயர்கல்விக்கென பல்கலைக்கழகங்களையும் நிறுவியதுடன் வறிய நிலையில் உள்ள மாணவர்களுக்கு பிரத்தியேகமான முறையில் முன்னெடுத்த திட்டங்களை பார்த்து நான் வியந்திருக்கிறேன்.மீண்டும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**Cyberjaya பல்கலைக்கழக**
**கல்வித் துறை சார்பு நிலை**
**பேராசிரியர்**
**டாத்தோ. N.S.ராஜேந்திரன்**

மலையகத்துத் தமிழர்தம் மணிதீபம் ஓய்ந்தது
மக்களுக்கு நிழல்கொடுத்த ஆலமரம் சாய்ந்தது
நிலையென்று நினைத்திருந்த நெடுங்கதிரும் தேய்ந்தது
நேயத்தின் ஜீவநதி நொடிப்பொழுதில் காய்ந்தது

தேமதுரத் தமிழோசை தேடித்தேடிக் கேட்டவர்
தேசமெலாம் சுற்றிவந்து திசையளந்து பார்த்தவர்
சாமிவேலு எனுந்தலைவர் சரித்திரமாய்ப் பூத்தவர்
சாகசங்கள் பலபுரிந்து தமிழர் நலம் காத்தவர்

ஈகையிலே சிவந்ததெல்லாம் இவர்கரங்கள் அல்லவோ:
ஈடறியாத் தலைவரிவர் பழகும் நலம் சொல்லவோ:
வாகைகொண்டு வாழ்ந்திருந்த வித்தகரைப் பாடவோ:
வானேகிப் போனதிசை விழிபார்த்து வாடவோ;



இருக்குமிடம் கலகலக்க இவர் பேசி மகிழ்ந்ததும்,
இல்லாதார் துயர் கண்டால் இதயமெலாம் நெகிழ்ந்ததும்,
கருக்கலிலே கண்டிருந்த கனவாகக் கலைந்ததே!
குளிரும் படி மழைபொழிந்த கார்மேகம் கரைந்ததே!

சீறுகின்ற சினமடங்கி சிரிப்பதற்கோ ஒரேகணம்
சிறுகுழந்தை போல் பேசி சொந்தம் கொள்ளும் பொன்மனம்
சாறெடுத்துத் தருவதுபோல்
சபை மணக்கும் சொல்வளம்
சாமிவேலு நினைவுகளை சுமந்திருக்கும் தமிழினம்

வாழ்வாங்கு வாழ்ந்தவர்க்கு விடை கொடுக்கும் நேரமே
விக்னேஸ்வரன் சரவணனின் விழிகளெங்கும் ஈரமே
சூழ்கின்ற கடமையிவர் செயல்களினால் வாழுமே
சாமிவேலு புகழ்பாடிக் கடலலைகள் ஆடுமே

**மரபின் மைந்தன் முத்தையா**
**பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர்**

## துன்சாமிவேல் அவர்கள் சிறந்ததொரு தலைவராவார்



நம் நாட்டில் மட்டுமன்றி இந்தியத் தமிழர்கள் மத்தியிலும் பிரபலமான தலைவர்.பிரவாசி பாரதியார் சம்மேளன விருது இவருக்கு கிடைக்கப் பட்டது.இங்கு நடைபெற்ற 12 மாநாடுகளில் முக்கிய இந்தியத் தலைவராக கலந்து கொண்டதுடன்,சமுதாயத்திற்கு பல சேவைகளையும் செய்து வந்தார்.அதன் அங்கீகாரமாக இந்திய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் தனது டுவிற்றர் பக்கத்தில் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.அந்தளவிற்கு தமிழ் சமுதாயத்திற்கு முக்கிய தலைவராக விளங்கியுள்ளார்.அவ்வாறான சிறப்பான தலைவரை நாம் அனைவரும் இழந்துவிட்டோம்.

**S.P. கருப்பையா**
**Pravasi Bharatiya Divas இன்**
**மலேசிய ஒருங்கிணைப்பாளர்**

## போய் வா தலைவா போய் வா

கனத்த இதயத்தோடு உனக்கு
விடை கொடுக்கிறோம்
போய் வா தலைவா!
அரை நூற்றாண்டாய் இந்த இனத்தின்
பேசுபொருள் நீ
அரசியல் களத்தில் அலங்காரத் தலைவனாக
இல்லாமல் இனத்தின் நாடித் துடிப்பறிந்து
போராடினாய்
கோபத்தில் அடிக்கடி நீ பொங்குவாய்
இனத்தின் உரிமைக்காக எத்தனை விழுப்புண்க
ளையும் நீ தாங்குவாய்
அலுவலகத் தம்பியும் அமைச்சராகலாம்
உன் வாழ்வே எங்களுக்கு உற்சாக டானிக்
ஒவ்வொரு விடியலிலும் உன் வீட்டு வாசலில்
காத்திருந்து உன் முகம் பார்த்து துன்பம் ஆற்றிய
உள்ளங்கள் எத்தனை எத்தனையோ!
பிறர் அறியாமல் யார் யாருக்கோ அள்ளித்தந்து
உள்ளங்களை அள்ளிக்கொண்டாய்
அரசியலா?இலக்கியமா? எந்த மேடை என்றாலும்
உன் கர்ஜனையால்
உள்ளங்களைக் கட்டிப் போடுவாய்
நூல் வெளியீட்டு விழாக்களை வெற்றி விழாக்களாக
நீ நிறமாற்றிக் காட்டினாய்
வாழ்வின் அடித்தட்டில் இருந்து நீ எழுந்து
வந்ததால் ஏழைகளின் இன்னல்களை
இதயத்தில் ஏந்தி இருந்தாய்
உன்னிடம் குறைகள் உண்டு
ஆயினும் நிறைகளால் எங்கள் இதயங்களில்
நிறைந்திருக்கிறாய்
மரணம் முற்றுப்புள்ளி வைக்கப் பார்த்து உன்னிடம்
தோற்று நிற்கிறது
அழிக்க முடியாத அழுத்தமான தடயங்களோடு
எங்கள் இதய அறைகளில் என்றும் நீ!

**ந. பச்சைபாலன்**



# நெஞ்சம் மறக்காத நேயராக
# துன் சாமிவேலு









**துன் ச.சாமிவேலுவுடன் முனைவர் மு. சங்கர்**

வணக்கங்க சங்கர், வாங்க நலமா இருக்கிறீங்களா?

அன்றைக்கு நீங்கள் வணக்கம் மலேசியா நிகழ்ச்சியில் ம.இ.கா தோற்றத்தைப் பற்றி மிக அழகாக, நிறைவாக சொன்னீங்க! பாராட்டுகள். நாட்டுக்குத் குறிப்பாக இந்தியர்களுக்குத் தேவையான தகவலாக அது இருந்தது ..பலர் மறந்து போனதை நினைவு படுத்தினீர்கள்நன்றி (வணக்கம் மலேசியா என்பது, மலேசிய வானொலி மின்னல் பண்பலையின், காலை நிகழ்ச்சிக்குப் பெயர்)

இப்படிப் பாராட்டுரை வழங்கியவர் மலேசிய இந்தியர்களின் மாண்புக்குரிய தலைவர் துன் ச. சாமிவேலு. இது நடந்தது 2005-ஆம் ஆண்டு.

பொதுப்பணி அமைச்சராக இருந்த அவரை, தலைநகர் அலுவலகத்தில் சந்தித்தபோது அன்னாருடைய அரவணைப்பில் நெகிழ்ந்து போனேன். அப்போது, மின்னல் பண்பலையில் நிகழ்ச்சி தயாரிப்பாளராக, அறிவிப்பாளராக நான் பணியாற்றிய காலம்.

உங்களுடைய எல்லா நிகழ்ச்சிகளையும் நான் தவறாமல் கேட்பேன், நல்ல தமிழ்.நல்ல உச்சரிப்புஎன்று ஊக்கமூட்டினார்.

மலேசிய வானொலியின் உற்ற நேயர் துன் ச. சாமிவேலு. அவரது பணிமனையில் வானொலி ஒலித்துக்கொண்டிருந்து. வீட்டிலும், வாகனத்திலும், குளியல் அறையில் கூட வானொலி ஒலிக்குமென்று அவர் கூறியது பெருவியப்பை அளித்தது. அந்த அளவுக்கு வானொலியோடு ஒன்றித்திருந்தவர் அவர். செய்திகளைத் தவறவிடமாட்டார்.

ஒரு காலத்தில் மலேசியத் தொலைக்காட்சியில் தமிழ் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றியவர் அவர்.

தேனொலியாக வலம் வரும் வானொலியில், சிறு தவறு நேர்ந்தாலும் உடனே ஒலிபரப்பு அறைக்கே அழைத்து விடுவார். வணக்கங்க.நான் சாமிவேலு பேசறேன் என்று தொடங்கி தவறைச் சுட்டிக்காட்டி திருத்துவார். உச்சரிப்பில் சிறு வழு ஏற்பட்டாலும் பொறுத்துக் கொள்ள மாட்டார் அந்தப் பெருந்தலைவர்.





**முனைவர் மு. சங்கர்**
மூத்த செய்தியாளர்
மலேசிய வானொலி ,
தொலைக்காட்சி

**இரங்கல் புத்தகத்தில் கையெழுத்திட்ட வேளை**



தமிழ் மீது தீராக் காதல் கொண்டவர். தமிழை மூச்சாக் கொண்டு வாழ்ந்தவர் துன் சாமிவேலு. அவர் காலத்தில் நாட்டில் வாரந்தோறும் பல்வேறு தமிழ்சார்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறும். எல்லாவற்றுக்கும் தலைமை அவரே.

மலைநாட்டில் தமிழுக்காக வாரி வாரி வழங்கிய கர்ணனாக வலம் வந்தவர். ஆறாம், ஒன்பதாம் உலகத் தமிழராய்ச்சி மாநாடுகளை முன்னின்று நடத்திய உலக மாமனிதர். தமிழ்ப்பள்ளிகளின் காவலனாக விளங்கியவர்.

29 ஆண்டுகள் அமைச்சர்..மலேசியாவில் மிக நீண்ட நாள் அமைச்சரவையில் இருந்தவர். 31 ஆண்டுகளாக மலேசிய இந்தியர் காங்கிரசின் தலைவர், சுங்கை சிப்புட் தொகுதியில் நீண்ட நாள் சேவை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சரவையில் இருந்து ஓய்வு பெற்ற பின் இந்திய தெற்காசிய சிறப்புத் தூதர் என்பவை அவர் ஏற்றிருந்த அதிகாரமிக்க பொறுப்புகள். இருந்தாலும் வாழ்நாள் முழுவதும் அவர் ஏற்றிருந்த; சுமந்திருந்த பொறுப்பு தமிழ்க்காவலர்.தமிழ்ச்சமூக காவலர். இறுதி மூச்சு வரை. அப்பணியை அவர் விடவில்லை.

ஊடகத்தில் பணியாற்றியிருந்தவர் என்பதாலோ என்னவோ. ஊடகத்தாரிடம் அவர் தனிமரியாதை செலுத்தி வந்தார். ஊடக நண்பர்களுக்கு அவர் மனத்தில் என்றுமே தனியிடம் உண்டு. அதுவும் தமிழ்சார்ந்த ஊடகத்துறையினர் என்றால்.சற்று அதிகமாகவே மதிப்பளித்தவர்.

மலேசியாவில், 'துன்' என்ற உயரிய விருது பெற்ற தமிழர்கள் இருவர் மட்டுமே. ஒருவர் சுதந்திரத் தலைவர் துன். வீ.தி. சம்பந்தன், மற்றொருவர் சாதனைத் தலைவர் துன் சாமிவேலு. இருவருமே வானொலியோடு அணுக்கத் தொடர்புடையவர்கள். வானொலிப் பணியாளர்களை அரவணைத்தவர்கள். இருவருமே இன்று இல்லைகனக்கிறது மனம்.

# நேசமிகுந்த தலைவனுடன் நெருங்கியிருந்த பொழுதுகள்



**மலேசிய அரசியல் வானில் உதிர்ந்து போன விடிவெள்ளி துன்.ச.சாமிவேலுவின் அறியப்படாத பக்கங்களை அவரது பள்ளித்தோழர் வீரபத்திரனின் மகனும் மலேசியா புத்திரா பல்கலைக்கழக நவீனமொழி மற்றும் தொடர்பாடல் துறையின் மூத்த விரிவுரையாளருமான முனைவர் வீரமோகன் வீரபத்திரன் அவர்கள் தமிழருவியின் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார் .**








**நேர்காணல்: ஆர்த்தி**

**? துன்.சாமிவேலு அவர்களோடு நெருக்கமாக பழகும் வாய்ப்பு அமைந்த போது உங்களிடம் எழுந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியுமா?**

அவரை முதன்முதலில் சந்திக்கும் போது பயம் கலந்த மதிப்பு தோன்றியது. அவரை சந்தித்த வேளையில் அவருக்கு எனது தந்தையின் வயது இருக்கும். எனது தந்தை இவர் பற்றி பல விடயங்கள் கூறியுள்ளார். அது தவிர,தொலைக்காட்சி, வானொலிகளிலும் இவர் பற்றிய பல விடயங்களை கேட்டு அறிந்துள்ளோம். இவ்வாறாக அவர் பற்றி பல விடயங்களை தெரிந்து கொண்டமையால், அவரை நேரில் சந்தித்ததும் இனம்புரியாததொரு உணர்வு ஏற்பட்டது. அவருடன் நெருக்கமாக பழகும் போது அவருடைய அரசியல் முதிர்ச்சியை அறிந்துகொள்ள முடிந்தது.எல்லா நாட்டு அரசியலையும் பற்றி பேசுவார்.அதை விட அவருடைய ஆளுமை, தலைமைத்துவம்,மொழிப் புலமை [தமிழ்,ஆங்கிலம்], இடத்திற்கு தகுந்தாற்போல் நடந்து கொள்ளும் ஆற்றல், இன,மொழிப்பற்று போன்ற விடயங்களை அவருடன் பழகும்போது தெரிந்து கொள்ளமுடிந்தது.

**? அவரிடம் உங்களைக்கவர்ந்த அம்சம் என்ன?**

வேலைப்பளுவின் சுமையால் கோபம் கொண்டாலும் சிறிது நேரத்திலே அதை மறந்து,அன்பாக பேசுவார்.அதுமட்டுமன்றி எந்த சூழ்நிலையிலும் காலம் தவறாமை அவரது சிறந்த பண்பாகும். சிறந்த பாடகர்,அது போல் எந்த தலைப்பை கொடுத்தாலும் பேசுமளவிற்கு ஆற்றல் படைத்தவர்.கல்வி, அரசியல் என எந்த துறையில் பிரச்சனை என்றாலும் உரிமையோடு குரல் கொடுப்பார்.அதுதவிர எந்த நேரத்தில் அழைப்பு எடுத்தாலும் அதற்கு பதிலளிப்பார்.போன்ற பல விடயங்கள் என்னைக் கவர்ந்தது.

**? மலேசிய தமிழர்களிடம் அவர் தோற்றுவித்த அரசியல் எழுச்சி எத்தகையது?**

இந்த நாட்டில் தமிழுக்கு ஏதும் பிரச்சனை வருகிறது எனத் தெரிந்தாலே அவர் பொங்கி எழுந்திடுவார்.அவரின் அந்த தைரியத்தால்



மற்றைய அமைச்சர்களுக்கும் இவர் மேல் பயம் கலந்த மரியாதை காணப்படும். எந்த பிரச்சனை என்றாலும் அதை நாடாளுமன்றில் பேசி தீர்த்து வைக்கவே போராடுவார்.சமுதாய எழுச்சிக்காக அரசியல்,சமூகம்,பொருளாதாரம்,கல்வி என சகல துறைகளது வளர்ச்சிக்காகவும் குரல் கொடுத்துள்ளார்.

**? தேசிய அரசியலில் அவரது வகிபாகம் பற்றி உங்கள் கருத்து என்ன?**

அவர் காலம் தொட்டு தற்காலம் வரை உள்ள அமைச்சர்கள் மார்தட்டி கூறக்கூடிய ஒரு விடயம் இவருடைய திறமையாலே மலேசியாவின் முதன்மை கட்சியான மலேசிய இந்திய காங்கிரஸ் கட்டியமைகாகப்பட்டது. இவர் அமைச்சராக இருக்கும் போது பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டார்.நெடுஞ்சாலைகள், மின்சாரம்,அஞ்சல் அலுவலகம் போன்ற பல விடயங்களை தனியார்மயப்படுத்தினார்.இவரது செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியடைந்தது.அதன்பின் தென்கிழக்காசிய தூதராக பதவியேற்று பல நாடுகளுக்கு சென்று நாட்டிற்கு மேலும் வருமானத்தை ஈட்டித்தரும் அளவிற்கு சில செயற்றிடங்களை மேற்கொண்டார்.இவ்வாறாக தேசிய அரசியலில் அவரின் பங்கு பெரிதளவில் காணப்பட்டது.

**? அரசியலுக்கு அப்பால் சமூகப்பணிகளில் அவருடைய பங்களிப்பு எத்தகையது?**

அரசியல் வளர்ச்சிக்கு அப்பால் நாட்டின் மொழி,சமயம்,இலக்கியம்,கலாச்சார வளர்ச்சிக்கு எப்போதும் துணை நிற்பார். இவருடைய காலத்திலே பல எழுத்தாளர்கள் உருவாகினர். வசதியற்ற எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டிற்கு ஊக்குவிப்புத்தொகை,உதவி வழங்கி அவர்களது எழுத்திற்கு மதிப்பு கொடுப்பார்.இவரது சேவைகளால் எங்கள் மனதில் அரசராகவே காணப்படுகிறார்.

**? அவரிடம் குழந்தைத்தனமாக நீங்கள் உணர்ந்ததென்ன?**

அவருடைய கோபத்திலும்,இலக்கியம் பேசும் அழகிலும் குழந்தைத்தனம் இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒருவித ஆதங்கங்கள்,கவலைகள் இருக்கும்.சில வேளைகளில் சொல்ல முடியாத துயரில் இருக்கும் போதும்,இவ்வளவு போராடியும் எனக்கெதிராக குரல் கொடுக்கவும் ஒரு கூட்டம் இருக்கிறதே எனக் கூறி அவர் கண்கள் கலங்கியதையும் கண்டுள்ளேன்.எவ்வாறானாலும் அவரது பல குணங்களில் குழந்தைத் தனத்தை காணலாம்.

**? பொதுமக்களின் தளத்தை அவர் எவ்வாறு கட்டியமைத்தார்?**

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் தவறாது பொதுமக்கள் சந்திப்புக்கான நேரத்தை ஒதுக்குவதில் தவறமாட்டார்.

கோபமாக இருந்தாலும் எந்த சூழ்நிலையையும் கண்ணியமாக கையாள்வார். அவரது நற்பண்பினால் தான் மக்கள் மத்தியில் அவருக்கென தனியிடம் காணப்படுகிறது.

**? மலேசிய தமிழர்களிடம் அவர் விட்டுச் சென்றிருக்கும் வெற்றிடம் எத்தகையது?**

ஒருவருடைய இறப்பிலே அவர் வாழ்ந்த விதம் பற்றி அறிந்து கொள்ளலாம்.வாழும் காலத்தில் எத்தனையோ குறைகளை பேசிய கூட்டம் கூட அவரது இறுதிச்சடங்கில் அலையென திரண்டது.'இறந்தும் வாழ்கின்றார்கள்.' என்பதற்கு இவரையும் எடுத்துக்காட்டாக கூறலாம். நிறைய தலைவர்களை உருவாக்கியுள்ளார். இன்று ஏய்ம்ஸ் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி அவருடைய வெற்றியாகும்.அவரினால் வளர்ந்த தலைவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.அவர் விட்டுச்சென்ற வெற்றிடத்தை பின்பற்றி அவர் போல் பல தலைவர்கள் உருவாகி வருகின்றனர்.





# அலையை ஆற்றிவிடும் அலையாத்திக்காடுகள்!

## அழிவடையும் ஆபத்தை தடுப்போம்









**ம.நவீன்**
**(மலேசியா)**

**கடந்த** சில மாதங்களாகவே கோல சிலாங்கூரில் உள்ள இயற்கை பூங்கா (Kuala Selangor National Park) ஊடகங்களில் பேசு பொருளாகியுள்ளது. அலையாத்தி காடுகளால் அமைந்துள்ள இந்த பூங்கா எதிர்க்கொண்டுள்ள ஆபத்து குறித்து, இதுவரை மலேசியத் தமிழ் ஊடகங்கள் எதிலும் வெளிவராத நிலையில் நான் அந்தப் பூங்காவின் நிர்வாகி மைக்கல் அவர்களைச் சென்று சந்தித்தேன்.

தெற்குத் தொடரின் சதுப்புநிலக் காடுகளில் எஞ்சியிருக்கும் ஒரே ‘ஆக்ஸிஜன் தொட்டி’ என வர்ணிக்கப்படுபவை கோலசிலாங்கூர் அலையாத்தி காடுகள். இயற்கையான கடலோரப் பாதுகாப்பு மண்டலமாகவும், சுனாமி தடுப்பணையாகவும் உள்ள இந்தக் காடுகள் இப்போது அழிவின் அச்சுறுத்தலில் இருப்பதை அவரும் ஒப்புக்கொண்டார். சர்வதேச சுற்றுலா மையமாக அப்பகுதியை மாற்றி அமைப்பதற்கான முன்மொழிவு நடந்துள்ளதாக அவர் கவலையுடன் தெரிவித்தார்.

இவ்வருடம் மே மாத இறுதியில் மேம்பாட்டுத் திட்ட நிறுவனத்தின் பிரதிநிதிகள் சிலர் கோல சிலாங்கூர் ‘இயற்கை பூங்கா’வுக்கு வருகை தந்ததாகவும் சிலாங்கூர் மாநில வனவியல் துறையிடம் (JPNS) பணியைத் தொடங்குவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளதாக அத்தரப்பு கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

அலையாத்தி காடுகள் கடலின் முகத் துவாரங்களில் அமைந்திருப்பவை. கடலில் இருந்து வரும் அலையின் சீற்றத்தை தடுத்து ஆற்றுப் படுத்தும் தன்மை இந்தக் காடுகளுக்கு இருப்பதால் இவை, ‘அலை + ஆற்று + காடுகள் = அலையாத்தி காடுகள்’ என்று அழைக்கப் படுகின்றன. சுனாமியின் வேகத்தைக் கூட கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவை என தமிழகத்தில் இருந்து வரும் ‘காடு’ இதழில் வாசித்துள்ளேன்.

ஏறக்குறைய 292 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட இயற்கை பூங்காவும் (Kuala Selangor National Park) அதைச் சார்ந்த அலையாத்தி காடுகளும் எனக்கு நெருக்கமானவை. தமிழகத்தில் இருந்து வரும் எழுத்தாளர்களை அழைத்துச் சென்று காட்டும் பிரதானமான நிலப் பகுதி. அக்டோபர் முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் கிழக்கு ஆசிய – ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் பறவைகளின் வேடந்தாங்களாக இப்பகுதி திகழ்கிறது. மேலும் இங்குள்ள Selangor silvered langur (Trachypithecus selangorensis) வகை குரங்குகள் தீபகற்ப மலேசியாவில் மட்டுமே காண முடிபவை. சிலாங்கூர் மாநிலம் அதன் பூர்வீகம். அதுபோல அலையாத்தி காடுகளை நம்பி வாழும் மின்மினிப்பூச்சிகளைக் காண அமாவாசை இரவுகளில் படகில் பயணித்ததுண்டு. இப்பகுதியைச் சூழ்ந்துள்ள சதுப்பு நிலமும் அலையாத்தி காடுகளும் அழியும்போது இவற்றின் வாழ்விடமும் அழியும் இன்னும் நூற்றுக்கணக்கான உயிர்களும் அழியும் என்றார் வனப்பகுதி பொறுப்பாளர்களில் ஒருவரான அசோக்.

சிலாங்கூர் நதி முகத்துவாரத்துக்கும் மெலாவாத்தி மலைக்கும் இடையில் அமைந்துள்ள இந்த இயற்கை பூங்காவும் அச்சுறுத்தலுக்குள்ளாவது இது முதன்முறையல்ல. 2007/2008 களில் பெரிய அளவிலான இறால் மற்றும் மீன் குளத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மலேசிய இயற்கை ஆர்வலர்கள் சங்கத்தின் (MNS) விரைவான நடவடிக்கையால் இயற்கை பூங்காவின் வளாகத்தில் சட்டவிரோதமாக அவர்கள் நுழைவது வெற்றிகரமாக நிறுத்தப்பட்டது. ஆனால் அப்படி கையகப்படுத்தப்பட்ட இறால், மீன் வளர்ப்புக்கான சதுப்பு நிலப் பகுதியில் ஆக்கிரமிப்பு 10 கிலோமீட்டருக்கு மேல் இருப்பதை எணிணிஞ்டீஹு உச்ணுஞுட வழியாகவே பார்த்து அறியலாம்.

2019 ஆம் ஆண்டு, இரண்டாவது தவணையில் நடந்த சிலாங்கூர் மாநில சட்டமன்ற மூன்றாவது கூட்டத்தின் போது, கோலசிலாங்கூர் இயற்கை பூங்கா பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அறிவிக்கும் இறுதி செயல்பாட்டில் இருப்பதாக தெரிவிக்கப்பட்ட தரவுகள் கிடைக்கின்றன. பொழுதுபோக்கு, கல்வி, ஆராய்ச்சி எனும் நோக்கில் மட்டுமே அவ்வனப்பகுதி செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது எழுந்துள்ள பேச்சுகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி தொடர்பான முன்னெடுப்புகளைக் குறித்த கேள்விகளை உருவாக்கியுள்ளது. மேலும் இந்தப் பகுதியை சர்வதேச சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் குறித்து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இதனை பாதுகாத்துவரும் மலேசிய இயற்கை ஆர்வலர்கள் சங்கத்திடம் (MNS) சிலாங்கூர் மாநில அரசாங்கம் எவ்வித பேச்சு வார்த்தையும் நடத்தப்படவில்லை.



1987 ஆம் ஆண்டு முதல் பொதுமக்களுக்கு திறந்திருக்கும் இந்த இயற்கை பூங்காவை நிர்வகித்து வரும் மலேசிய இயற்கை ஆர்வலர்கள் சங்கத்தின் (MNS) செயல்திட்டங்களை நான் நேரில் கண்டுள்ளேன். கடல் பெருக்கிற்குப் பின்னர் அலையாத்தி காடுகளில் ஒதுங்கும் குப்பைகளை பல்வேறு அமைப்புகளின் உதவியுடன் அகற்றுவது, புதிய அலையாத்தி மரங்களை நடுவது, மாணவர்களுக்கும் இளம் தலைமுறைக்கும் அலையாத்தி காடுகளைப் பாதுகாப்பதன் தேவைகளை உணர்த்துவது என இடைவிடாது பணி செய்து வருகின்றனர். இங்கு சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் குப்பைகள் மறுபயனீட்டுக்கு உதவாதவை. பெரும் செலவுகள் செய்தே அவற்றை அப்பகுதியில் இருந்து அகற்ற வேண்டியுள்ளது. இப்படி பல்வேறு சவால்களுக்கிடையில் சூழலியலைப் பாதுகாக்கும் பொருட்டு செயல்படும் இந்த அமைப்புக்கு நேர்ந்துள்ள மிகப்பெரும் நெருக்கடி இது.

மலேசியா உலகில் மிகப்பெரிய அலையாத்தி காடுகளைக் கொண்ட நாடுகளில் ஒன்று. சுதந்திரம் பெற்ற காலம் தொடங்கி 50% காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதாகத் தரவுகள் கூறுகின்றன. அந்த வரிசையில் கோலசிலாங்கூர் இயற்கை பூங்காவும் வந்துவிடுமா என்ற அச்சம் இந்தப் பகுதியை நம்பி வாழும் சிறு மீனவர்களுக்கு எழுந்துள்ளது.

மலேசிய இயற்கை ஆர்வலர்கள் சங்கத்தைச் சேர்ந்த மைக்கல் அவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் உத்தேசமான அமைப்புமுறை குறித்து கூறியபோது, சதுப்புநிலச் சுற்றுச்சூழலுடன் கூடிய ஆடம்பர தங்கும் விடுதிகளை அமைப்பது, ஒரு உள்ளூர் தயாரிப்பு விற்பனை மையம், ஸ்பா, யோகா மற்றும் தைச்சி மையம், சுடுநீர் குளம் மற்றும் சேலட் (Chalet) மாதிரியிலான பல வகை தங்குமிடங்கள் அமைக்கும் திட்டங்களும் உள்ளன என்றார். தங்கள் அமைப்பு வளர்ச்சிக்கு எதிரானது இல்லை என்றவர், இதை அமைக்க சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பை சேதப்படுத்துவதற்கு பதிலாக பெரும்பாலும் கைவிடப்பட்ட மாநில நிலத்தில் அதை ஏன் செய்யக்கூடாது எனக் கேள்வி எழுப்பினார்.

வனம் என்பது அழகுக்காக மரங்களை மட்டும் சுற்றிலும் அடுக்கிவைப்பதல்ல. கண்ணாடித்தொட்டியில் நீந்தும் மீன்களுக்கான கடல் காட்சிகளைப் பின்னணியில் ஒட்டிவைத்து ஏமாற்றும் வித்தையல்ல. சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான திட்டம் என இக்காடுகளை அழித்துவிட்டு தங்கும்விடுதிகளை அமைக்கும்போது கோலசிலாங்கூர் அலையாத்தி காடுகளில் மட்டுமே இருக்கும் வண்ணத்துப்பூச்சிகள் (mangrove tiger butterfly), ஆற்று நீர்நாய்கள் (Smooth&coated otter), காட்டு நீர்நாய்கள் (Oriental small&clawed otter), குதிரைலாட நண்டுகள் (Horseshoe crab), பலவிதமான நண்டுகள், மட்ஸ்கிப்பர் ஆகியவை மொத்தமாக அழிகின்றன. குரங்குகளும் பறவைகளும் தங்கள் இருப்பிடங்களை இழக்கின்றன. பிரம்மாண்ட ஒளிச்சிந்தும் மின்மினிகள் இருளுக்குள் மூழ்குகின்றன.

மனிதன் தன் சுயநலத்துக்காக அந்த இருளை அலட்சியம் செய்கிறான். அவ்விருள் இந்த உலகை மொத்தமாக சூழ்ந்து மூடும்போது அவன் அலரல் எவருக்கும் கேட்காது. இதை மக்களின் விழிப்புணர்வு மட்டுமே மாற்ற முடியும்.

சமூக ஆர்வளர்களும் இயற்கை நேசர்களும் ஒருமுறை கோலசிலாங்கூரில் அமைந்துள்ள இயற்கை பூங்காவுக்கு (Kuala Selangor National Park) ஒருமுறை செல்லலாம். வனத்தைப் பராமரிக்கும் மலேசிய இயற்கை ஆர்வலர்கள் சங்கத்தின் செயல்திட்டங்களில் பங்கெடுக்கலாம். நமது நாளைய தலைமுறைக்கு கொஞ்சம் மரங்களைச் சேமித்துக்கொடுக்கலாம்.





# அணுவணுவாய் கொல்லும் அணுவாயுதங்கள்!

**அணு** ஆயுதங்கள் என்பவை மிகவும் சக்திவாய்ந்த வெடிபொருட்கள் அல்லது குண்டுகள் ஆகும். இந்த குண்டுகள் அணுவின் அணு அல்லது அணுக்கருதுகள்களை பிளப்பது அல்லது இணைப்பதன் மூலம் தங்கள் சக்தியைப் பெறுகின்றன. இது அறிவியல் மொழியில் இணைவு (fusion) அல்லது பிளவு (Fission) என்று அழைக்கப்படுகின்றது.

உலகில் இதுவரை இரண்டு முறை அணுகுண்டுகள் போடப்பட்டு அவை பயங்கர சேதத்தை ஏற்படுத்தி உள்ளன. இந்த இரண்டு தாக்குதல்களையும் 77 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா நடத்தியது. ஜப்பானின் இரண்டு நகரங்களின் மீது அது அணுகுண்டுகளை வீசியது. 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின் மீதும், ஆகஸ்ட் 9 அன்று நாகசாகியிலும் அமெரிக்கா அணுகுண்டு வெடிக்கச் செய்ததில், 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஹிரோஷிமாவிலும், 70 ஆயிரம் பேர் நாகசாகியிலும் இறந்ததாக நம்பப்படுகின்றது.

பனிப்போர் காலத்திற்குப் பிறகு அணு ஆயுதங்களின் கையிருப்பு வெகுவாகக் குறைந்திருந்தாலும், மிகக் குறுகிய காலத்திற்குள் பயன்படுத்தக்கூடிய நூற்றுக்கணக்கான அணு ஆயுதங்கள் இன்னும் உலகில் உள்ளன.

அந்த ஆயுதங்கள் மூலமாக வெளிப்படும் ஆற்றல், நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் வெளிப்படும் ஆற்றலை விடப் பலமடங்கு அதிகமாக இருக்கும். பாதிப்புகளும் அந்த அளவுக்கு அதிகமாகவே இருக்கும்.

அணு ஆயுதம் ஏற்படுத்தும் பாதிப்பு, எவ்வளவு உயரத்திலிருந்து வீசப்படுகின்றது உள்ளிட்டவற்றை பொறுத்து மாறுபடும். உதாரணமாக, ஹிரோஷிமாவில் வீசப்பட்டதை விட 100 மடங்கு அதிக ஆற்றல் கொண்டதும், 800 கிலோ டன் எடை கொண்டதுமான ஒரு அணுகுண்டை சுமார் 1,600 அடி உயரத்தில் இருந்து வீசுவதாக கற்பனை செய்துகொள்வோம்.

இந்த அணுகுண்டு தரையில் விழுந்து வெடித்த சில நொடிகளில் மிகப் பெரிய நெருப்புவளையம் உருவாகும். அப்போது வெளிப்படும் வெப்பக் கதிர்வீச்சானது ஆயுதத்தில் உள்ள கதிரியக்கப்பொருளை வெப்பப்படுத்தும். அப்போதைய வெப்பநிலை, சூரியனின் மையப்பகுதி வெப்பநிலைக்கு [சுமார் 10 கோடி டிகிரி செல்சியஸ்] சமமாக இருக்கும். அந்த நெருப்புவளையமானது குண்டு வெடித்த இடத்தில் இருந்து சுமார் 800 மீட்டர் சுற்றளவுக்குப் பரவும்.

அடுத்த சில நொடிகளில் நெருப்பு வளையத்தில் இருந்து மணிக்கு சுமார் 3,200 கி.மீ. வேகத்தில் [ஒலியின் வேகத்தை விடப் பலமடங்கு] பெரும் வெப்பக் கதிர் வீச்சும் உயர் அழுத்தமும் அனைத்து திசைகளிலும் வெளியேறும். அத்தகைய சூழலில் வெப்பநிலை 3,00,000 டிகிரி செல்சியஸாக இருக்கும். இது மனித சடலங்கள் எரிக்கப்படும் வெப்பநிலையை விட சுமார் 300 மடங்கு அதிகம். எனவே, அந்த வெப்பக் கதிர்வீச்சு பரவும் பகுதிகளில் உள்ள அனைவரும் உடனடியாக மரணிப்பது நிச்சயம்.

அணுகுண்டு வீசப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 11 கி.மீ. தொலைவில் இருப்பவர்களுக்கு முதல்நிலை தீக்காயங்களும், சுமார் 9 கி.மீ. தொலைவில் இருப்பவர்களுக்கு இரண்டாம்நிலை தீக்காயங்களும், சுமார் 8 கி.மீ. தொலைவில் இருப்பவர்களுக்கு மூன்றாம்நிலை தீக்காயங்களும் ஏற்படும். சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள அனைவரும் நிச்சயம் உயிரிழப்பர்.

அங்குள்ள பொருள்களும் எரிந்து சாம்பலாகும். மணல்கூட உருகி கண்ணாடியாகிவிடும். அணுகுண்டு வீசப்பட்டவுடன் வெளிப்படும் அதீத ஒளியானது பல கி.மீ. தொலைவுக்கு அப்பால் உள்ளவர்களின் கண்பார்வையையும் பறிக்கும் ஆற்றல் கொண்டது. குண்டு வீசப்படும்போது நிலவும் காலநிலையும் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தும். மேகங்கள் சூழ்ந்த இடத்தில் வீசப்படும் அணுகுண்டானது, மேகங்கள் இல்லாத இடத்தில் வீசப்படுவதைக் காட்டிலும் குறைவான விளைவுகளையே ஏற்படுத்தும். எனினும்,

14 ஆம் பக்கம் பார்க்க...

> **அணு ஆயுதங்களின் பயன்பாட்டினால் ஒட்டுமொத்த சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும். அப்போது ஏற்படும் கரும்புகை, புவியின் வெப்பநிலையைப் பெருமளவுக்குக் குறைக்கும். போதிய வெப்பநிலை இல்லாமல் போனால், மழைப்பொழிவு குறையும். அதனால், உணவு உற்பத்தி பாதிக்கப்படும்; மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும். பசிக்கொடுமை அதிகரித்து உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும்.**






சந்திரசேகரம்
**சாரிஷா**






# அணுவணுவாய் கொல்லும் அணுவாயுதங்கள்!

அந்த குண்டும் பலரது உயிரிழப்புக்குக் காரணமாக இருக்கும்.

அணுகுண்டில் இருந்து வெப்பக் கதிர்வீச்சு வெளிப்பட்ட சில நொடிகளில் பெரும் வெடிப்பு நிகழும். அப்போது அனைத்து திசைகளிலும் பரவும் அதிக அழுத்தம் கொண்ட ஆற்றலானது வழியில் உள்ள கட்டடங்கள், கட்டுமானங்கள் என அனைத்தையும் துவம்சம் செய்துவிடும். குண்டு வெடித்த இடத்தில் இருந்து சுமார் 3 கி.மீ. தொலைவு சுற்றளவிலுள்ள அத்தனையும் சுக்குநூறாகிவிடும்.

கட்டடங்கள் இடிந்து விழும்போது ஏற்படும் சிறுதுகள்கள் காற்றில் பறந்து மேலும் பல்வேறு சேதங்களை ஏற்படுத்தும். துகள்கள் உள்ளிட்டவற்றுடன் கூடிய காற்று தரையில் இருந்து சுமார் 12 கி.மீ. உயரம் வரை சென்று மேகங்களை உருவாக்கும். அந்த மேகங்கள் மழையாகப் பெய்யும்போது மனிதர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும்.

அணுகுண்டு வெடிப்பதால் வெளியாகும் கதிர்வீச்சுகள் சுமார் 100 ஆண்டுகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் திறன் கொண்டவை. குண்டு வெடிக்கும்போது பரவும் மாசு துகள்கள் மூலமாகவே கதிர்வீச்சும் பரவும். அத்துகள்களைக் கொண்ட காற்று, குண்டு வெடித்த இடத்தில் இருந்து நீண்ட தொலைவுக்குப் பயணித்து பாதிப்புகளை ஏற்படுத்தும். குண்டை காற்றிலேயே வெடிக்கச் செய்தால், குறைந்த அளவிலான துகள்களும், தரையில் வெடிக்கச் செய்தால் அதிக அளவிலான துகள்களும் பரவும். அத்துகள்கள் மற்ற இடங்களுக்குப் பரவும் வேகம், அப்போதைய காலநிலையைச் சார்ந்து அமையும். தரையில் அணுகுண்டை வெடிக்கச் செய்வது உயிரிழப்பு எண்ணிக்கையை அதிகப்படுத்தும்.

> அணுவாயுதங்கள் வெடித்தால், மின்னணுப் பொருள்கள் இயங்காது கைப்பேசி, தொலைக்காட்சி, இணையதளம் என எதுவும் இயங்க வாய்ப்பில்லை ஓசோன் படலம் கடுமையாகப் பாதிக்கப்படும். சூரியனில் இருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர்கள் பூமியை அடைந்து மனிதர்களுக்குக் கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தும்.



அணுகுண்டினால் ஏற்படும் உடனடி உயிரிழப்புகள் இறுதியானவை அல்ல. அதில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சினால் சில மாதங்கள் கழித்தும், சில ஆண்டுகள் கழித்தும் பலர் உயிரிழக்க வாய்ப்புள்ளது. கதிர்வீச்சுக்கு உள்ளான சில நபர்களுக்கு சில ஆண்டுகள் கழித்தே உடல்நலப் பாதிப்புகள் ஏற்படும். புற்றுநோய், கண்புரை உள்ளிட்டவை நீண்ட கால பாதிப்புகளாக இருக்கும்.

அணு ஆயுதங்களின் பயன்பாட்டினால் ஒட்டுமொத்த சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் அப்போது ஏற்படும் கரும்புகை, புவியின் வெப்பநிலையைப் பெருமளவுக் குக் குறைக்கும். போதிய வெப்பநிலை இல்லாமல் போனால், மழைப்பொழிவு குறையும். அதனால், உணவு உற்பத்தி பாதிக்கப்படும்; மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும். பசிக்கொடுமை அதிகரித்து உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும்.






இவ் அணுவாயுதங்கள் வெடித்தால், மின்னணுப் பொருள்கள் இயங்காது கைப்பேசி, தொலைக்காட்சி, இணையதளம் என எதுவும் இயங்க வாய்ப்பில்லை ஓசோன் படலம் கடுமையாகப் பாதிக்கப்படும். சூரியனில் இருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர்கள் பூமியை அடைந்து மனிதர்களுக்குக் கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தும்.

காற்று மாசுபாடு அதிகரிக்கும் மக்களுக்குப் பல்வேறு நோய்கள் உருவாகும். அதற்குச் சிகிச்சை அளிப்பதற்கான கட்டமைப்புகள் கூட தாக்குதலில் தரைமட்டமாயிருக்கும்; விலைவாசி உயர்ந்து பொருளாதாரம் கட்டுக்குள் இல்லாமல் சரிவைச் சந்திக்கும். போரில் ஈடுபடாத நாடுகளைச் சேர்ந்த மக்களும் பாதிக்கப்படுவர். ஒட்டுமொத்தமாக அணு ஆயுதப் போர் என்பது மனிதர்களின் அழிவுக்கு மட்டுமே வழிவகுக்கும்.

இத்தகைய அணு ஆயுதங்களின் விளைவுகளை அனைத்து நாடுகளும் அறிந்தே உள்ளன. ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீதான தாக்குதலின் விளைவுகள் இன்னும் நினைவில் இருந்து அகலாமலேயே உள்ளன. அணு ஆயுதங்களைக் கொண்டு மற்ற நாடுகளைக் குறிப்பிட்ட நாடுகள் அச்சுறுத்துமே தவிர, எத்தகைய சூழலிலும் அவற்றைப் பயன்படுத்த நாடுகள் முன்வராது என்றே அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், அணு ஆயுதங்கள் இருக்கும்வரை அதுதொடர்பான அச்சுறுத்தலும் தொடரும் என்பதே கசப்பான உண்மை.



# தத்தளிக்கிறது கடல்சூழ் இலங்கைத்தீவின் சுற்றுலாத்துறை!





புஸ்பராசா
கோபிகா

**இந்து** சமுத்திரத்தின் முத்து, இரத்தின துவீபம், ஆசியாவின் வைரம் என்றெல்லாம் வர்ணிக்கப்டும் இலங்கை நாடானது பல இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்டமைந்த ஓர் அழகிய தீவாகும்.விண்ணைத் தொடும் மலைகளும், எப்போதும் வற்றாத ஆறுகளும், நீர்வீழ்ச்சிகளும், பச்சை கம்பளம் விரித்தாற் போன்ற தேயிலைத் தோட்டங்களும் உள்ளடங்கலாக எண்ணிலடங்கா கொடைகள் இங்கே காணப்படுகின்றன. இவற்றின் காரணமாகவே இலங்கையானது சுற்றுலாத் துறைக்கு ஏற்றதொரு நாடாக காணப்படுகிறது. 2010ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலாத்துறை அதிகார சபையானது சுற்றுலாத் தலங்களை கடற்கரை ஓரங்கள், மரபுரிமை சின்னங்கள், சரணாலயங்கள், இயற்கை அழகுகள், உடல் மற்றும் மனநிறைவு, விழாக்கள்,சாகசங்கள் மற்றும் விளையாட்டுக்கள்,திறமைகள் என்றவாறாக 8 பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது.

## சுற்றுலாத்தளங்கள்

1)கடற்கரைகள்- நீர்கொழும்பு கல்கிசை,பென்தொட்ட,உணவத்துன,வெலிகம,வடக்கு காங்கேசன்துறை,கசூரினா போன்ற இடங்களில் காணப்படும் கடற்கரைகள்.

2) மரபுரிமைச்சின்னங்கள்: சிகிரியா,சிங்கராஜ வனம்,தம்புள்ள,அனுராதபுரம்,கண்டி, ஹற்றன் சமவெளி

3)சரணாலயங்கள் -யால,உடவளவை தேசிய பூங்கா,குமண பறவைகள் சரணாலயம்,வஸ்கமுவ வில்பத்து சரணாலயம்,பின்னவல யானைகள் சரணாலயம்,மாதுறு ஓயா தேசியப் பூங்கா என்பன இதில் உள்ளடங்கும்.

4)விளையாட்டு மற்றும் சாகசம் – தூயநீர் படகு சவாரி[கிந்துல], சூரியக்குளியல்[அறுகம்குடா], படகோட்டம் [பெண்தொடட]

5)நீர்வீழ்ச்சிகள் – பம்பரகந்த,துன்கிந்த

6)தாவரவியற்பூங்கா – பேராதனை,ஹக்கல,ஹ^னராதகோடா

7) விழாக்களும் நிகழ்வுகளும் – டுதுரு பெரஹரா [களனி], நவம் பெரஹரா [கொழும்பு], வெசாக்,பொசன்,கண்டிய நடனம்,நல்லூர் திருவிழா,சப்ரகமுவ நடனம்,பரதநாட்டியம்

என்றவாறாக எண்ணிலடங்கா பல சிறப்பம்சங்களையும் கொண்டு சுற்றுலாத்துறையில் தனக்கென ஒரு அடையாளத்தை பதித்துக்கொண்ட போதிலும் கூட தற்காலத்தில் இலங்கையின் சுற்றுலாத்துறை வீழ்ச்சிப் பாதையை நோக்கியே



பயணிக்கிறது.அதற்கு குறிப்பிடத்தக்க சில காரணங்கள் அடிப்படையாக உள்ளன.

## வீழ்ச்சிக்கான காரணங்கள்

### ஈஸ்டர் தாக்குதல்

சுற்றுலாத்துறை வீழ்ச்சியை நோக்கிச் சென்றமையின் ஆரம்பப்புள்ளி இதிலிருந்தே தொடங்கியது என்றே கூறவேண்டும். 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி கொண்டாடப்பட்ட ஈஸ்டர் தினத்தன்று மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் மூன்று நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 266 பேர் உயிரிழந்ததுடன் 400க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அதில்



40 பேர் வெளிநாட்டவர்கள். இதனால் வீழ்ச்சி கண்ட சுற்றுலாத்துறை மீண்டும் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் வழமைக்கு திரும்பியதாக இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை தெரிவிக்கின்றது. இலங்கையில் எதுவிதமான பிரச்சினைகளும் இல்லாத 2018 ஆம் ஆண்டின் மார்ச் முதல் ஆகஸ்ட் வரை 11 லட்சத்து 8 ஆயிரத்து 293 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்தனர். ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்ட 2019ம் ஆண்டு அதே காலப்பகுதியில் இலங்கைக்கு 7லட்சத்து 71ஆயிரத்து 645 பயணிகளே வருகை தந்தனர்.

### கொரோனா வைரஸ் தாக்கம்

ஈஸ்டர் தாக்குதலால் வீழ்ச்சியடைந்த இத்துறை முழுவதுமாக தலைநிமிர முன் 2020 மார்ச் 20 அன்று கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடு முடக்கப்பட்டு, விமான நிலையங்கள் மூடப்பட்டன. இந்த நிலை ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி முதலே படிப்படியாக வழமைக்கு கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் 2020 மார்ச் முதல் ஆகஸ்ட் மாத இறுதி வரை இலங்கைக்கு 71ஆயிரத்து 370 சுற்றுலா பயணிகள் மாத்திரமே வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபையின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மின்வெட்டும், எரிபொருள் பற்றாக்குறையும்

சுற்றுலாத்துறையின் வீழ்ச்சிக்கு இவை குறிப்பிடத்தக்க காரணங்களாக அமைகின்



றன. மின்வெட்டு காரணமாக தனது ஹோட்டலில் தங்கியிருந்த சுவிட்சர்லாந்து,போலந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் அறைக்கு வெளியே வந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக கொழும்பு மவுண்ட் பியர்ல்ஸ் ஹோட்டலின் உரிமையாளர் தனது கருத்தை தெரிவித்திருந்தார். மூன்று மணி நேரங்களுக்கும் மின்வெட்டு இருக்கின்றது. இவ்வாறான நிலையில் சில ஹோட்டல்களில் ஜெனரேட்டர்கள் இருப்பதில்லை. பெரிய ஹோட்டல்களில் ஜெனரேட்டர்கள் இருந்தாலும் போதுமான டீசல் கிடைப்பதில்லை. மின்சாரம் இல்லாமல் பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.



‘ஹோட்டலில் மின்சாரம் இல்லை.சாலையில் வாகனங்கள் நிற்கின்றன.எரிவாயு இல்லாததால் உணவகங்கள் மூடப்பட்டிருக்கின்றன.அறைகளில் குளிரூட்டி வேலை செய்யவில்லை.’ இந்நிலையில் சுற்றுலாப்பயணிகள் எவ்வாறு வருவார்கள் என பயண வழிகாட்டிகள் தமது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

### பாதுகாப்பின்மை

நாட்டின் சீரற்ற அரசியல்,பொருளாதார நிலைமையினால் கடந்த மாதங்களில் மக்களால் அரசுக்கெதிராக நாடெங்கிலும் ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்புகளும் இடம்பெற்றன. இதன் போது ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த முடியாத சூழலில் கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப் பிரயோகம் போன்ற. அசம்பாவிதமான சம்பவங்களும் இடம்பெற்றன. இத்தகைய பாதுகாப்பற்ற சூழல் காரணமாகவும் சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைவடைந்திருந்தது. டொலர் கையிருப்பு குறைந்து, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமையால் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களே அந்நியச் செலாவணியின் வரவையும் குறைக்கும் நிலைக்கு உள்ளாகியது. இந்நிலையிலும் கூட அரசுக்கெதிராக மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் ஆதரவு தெரிவித்து,அதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### வருமானவீழ்ச்சி

2018 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறையால் பெறப்பட்ட வருமானம் 4,380.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இது 2019ம் ஆண்டில் 773.7 மில்லியனால் குறைந்து 3,606.9மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது. அதாவது [17.7% வீழ்ச்சி] 2020 ம் ஆண்டு



மேலும் குறைவடைந்து 682.4 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது.[2018 உடன் ஒப்பிடுகையில் 84.4% வீழ்ச்சி].2021ம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலாத்துறையின் மூலமான வருமானம் 96.7%ஆக சரிந்துள்ளது.

இவ்வாறாக நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெற்றுத்தருவதில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கும். அதாவது நாட்டின் மொத்த அந்நியச் செலாவணி வரவில் 13 முதல் 15 சதவீதமான பங்களிப்பை அளித்து வந்த சுற்றுலாத்துறையின் வளர்ச்சியை மீண்டும் கட்டியெழுப்ப பல திட்டங்களும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.குறிப்பாக 2025 ஆம் ஆண்டளவில் இலங்கை 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு 3.5 பில்லியன் டொலர் வருமானத்தை எதிர்பார்க்கும் நிலையில் சுமார் 1.5 உயர்மட்ட சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்கான நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.





# ஜெனீவா அமர்வுகளும் ஜென்டில்மேன்களின் அரசியலும்!



பி.மாணிக்கவாசகம்

ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமை விவகாரம் கவனத்திற் கொள்ளப்படும்போதெல்லாம் அந்த அமர்வுகள் ஓர் அரசியல் திருவிழாவாகவே நடந்தேறுவது வழக்கம். அந்த வழக்கத்திற்கமைய இந்த வருட செப்டம்பர் மாத அமர்வும் ஒரு திருவிழாவாகவே அமைந்துவிட்டது.

ஜெனிவா அமர்வுகள் ஆரம்பமாகின்றபோது அரசியல்வாதிகளும், அரசியல் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான அமைப்புக்கள், உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தனித்தனி குழுக்களாகவும் தனிப்பட்டவர்களாகவும் ஜெனிவாவுக்குப் பயணமாகிவிடுவார்கள். ஜெனிவா அமர்வில் பங்குகொள்வதற்காகச் செல்லும் வகையிலேயே அவர்களுடைய இந்தப் பயணங்கள் பிரசாரப்படுத்தப்படும்.

## மனித உரிமைகள் பேரவையில் தாக்கம் செலுத்துபவர்கள் யார்?

மனித உரிமைகள் பேரவை அமர்வென்பது உறுப்புநாடுகளின் அரச பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோரே முக்கியமாக இடம் பெற்றிருப்பார்கள். அவர்களே அந்த அவையின் அமர்வுகளில் பங்கேற்க முடியும். அவ்வாறு பங்கேற்கின்ற அரச பிரதிநிதிகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் அல்லது தனி நபர்கள் சில வேளைகளில் அந்த அமைப்புக்களின் சார்பில் பங்கேற்பார்கள். கருத்து வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்கும்.

இதனைவிட மனித உரிமைகள் ஆணையாளரை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைப்பதுண்டு. இந்தச் சந்திப்புக்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. மிக முக்கியமானவர்களையே மனித உரிமைகள் ஆணையாளர் சந்திப்பார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சபை அமர்வுகளில் முக்கியமாக வெளியிடப்பட வேண்டிய கருத்துக்கள், தகவல்கள், விடயங்களைத் திரட்டும் வகையில் பக்க நிகழ்வுகள் பல இடம்பெறுவதுண்டு. அந்த நிகழ்வுகளில் வெளியிடப்படுகின்ற கருத்துக்கள் அவற்றின் தாக்கம் பெறுமதி என்பவற்றின் அடிப்படையில் உள்வாங்கப்பட்டு, மனித உரிமைப் பேரவையில் பங்கேற்பவர்களினால் பிரதிபலிக்கப்படும்.




> ஐ.நா. மனித உரிமைப் பேரவை தன்னால் இயன்ற அளவில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்திருக்கின்றது. அது விடயத்தில் அது தனது முயற்சிகளை முற்றாகக் கைவிடவில்லை. ஆனால் பொறுப்பு கூறலுக்கும் அரசியல் தீர்வு காண்பதற்கும் உரிய மையப்புள்ளியை நோக்கி இலங்கையை நகர்த்திச் செல்வதற்கான பேரவையின் பிரேரணைகளும் அறிக்கைகளும் இன்னும் ஏட்டளவிலேயே காணப்படுகின்றன. செயல் வல்லமை கொண்ட நிலைமைக்கு நகரவில்லை என்பதே இப்பொழுதுள்ள பிரச்சினையாகும்.







## பக்கநிகழ்வுகளின் தாக்கம்

ஆனால் பக்க நிகழ்வுகளில் வெளியிடப்படுகின்ற அனைத்து கருத்துக்களும் அவ்வாறு இடம்பெறுவதில்லை. முக்கியமாக பேரவையில் கருத்துச் செறிவான இறுக்கமாக விடயங்களை உள்ளடக்கிய நிலையிலேயே பேச்சுக்கள் அமைந்திருக்கும். இதற்கு முக்கிய காரணம் அவையில் கருத்து வெளியிடுபவர்களுக்கு மிகக் குறுகிய நேரமே – நிமிடங்கள் முறையிலேயே சந்தர்ப்பம் அளிக்கப்படும். அங்கு அரசியல் மேடைகளில் பேசுவதைப் போன்று பேசுவதற்கோ அல்லது நாடாளுமன்றத்தில் நீட்டி முழக்கிப் பேசுகின்ற பாணியிலோ பேச முடியாது. ஆகவேதான் அதற்கேற்ற வகையில் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகள் ஆற்றுகின்ற உரைகள் இறுக்கமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய பல்வேறு கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்ட வகையிலேயே மனித உரிமைப் பேரவையில் பங்கேற்பதற்கும் கருத்துக்களை வெளியிடுவதற்குமான சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனால் ஜெனிவாவுக்குச் சென்று மனித உரிமைப் பேரவையின் பக்க அமர்வுகளில் கருத்து வெளியிடுபவர்கள் மனித உரிமைகள் பேரவையில் குரல் கொடுப்பதற்காகச் சென்று வந்தவர்கள் என்ற அரசியல் செல்வாக்குடையவர்களாகப் பொதுவில் சாதாரண மக்களால் நோக்கப்படுவார்கள். இந்த வகையில் ஓர் அரசியல் பிரசாரம் முன்னெடுக்கப்படுவதும் உண்டு. இத்தகைய பிரசாரங்கள் பலருடைய அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

இது ஒரு,புறமிருக்க மனித உரிமைகள் பேரவையின் அமர்வையொட்டி ஐநா மனித உரிமை ஆணையாளருக்கும், உறுப்பு நாடுகளுக்கும் முறைப்பாட்டுக் கடிதங்கள் எழுதுவதும் உண்டு. இந்தக் கடிதங்களில் காரசாரமாக விடயங்கள் முன்வைக்கப்பட்டு வேண்டுதல்களும் விடுக்கப்படுவதுண்டு. அரசியல் கட்சிகள் தனியாகவும், பொது அமைப்புக்கள் தனியாகவும் கடிதங்களை எழுதி அனுப்புவார்கள்.

## எதிர்பார்ப்பும் எதிர்வினைகளும்

இவ்வாறு கடிதங்கள் எழுதுவதன் ஊடாகவும், சபை அமர்வுகளையொட்டி முக்கியமான விடயங்களை வெளிப்படுத்துவதன் ஊடாகவும் மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசுக்கு ஏற்படக் கூடிய அழுத்தங்கள், நெருக்கடிகளை அனுமானித்து அது தொடர்பில் மக்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கும் வகையில் கருத்தாடல்களும் இடம்பெறுவதுண்டு. இந்த வகையில் ஜெனிவாவின் ஒவ்வோர் அமர்வின் போதும் பெரிய அளவில் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும். இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் நீதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுவதும் உண்டு. ஆனால் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளின் முடிவில் அந்த எதிர்பார்ப்புக்கள் இலவு காத்த கிளியின் நிலைமைக்கு மக்களைத் தள்ளிவிடுவதும் உண்டு. இதனைத் தமிழ் மக்கள் கடந்த 13 வருடங்களில் பல தடவைகள் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கின்றார்கள். அந்த வகையில் இம்முறையும் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவதற்கான

மிகுதி 17 ஆம் பக்கத்தில்...

# ஜெனீவா அமர்வுகளும் ஜென்டில்மேன்களின் அரசியலும்!



ஆக்கிரமிக்கப்படும் குருந்தூர் மலை




முயற்சிகள் அல்லது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அரசியல் ரீதியிலான எதிர்பார்ப்பு ஏற்படுத்தப்டப்பட்டிருந்தது. குறிப்பாக இம்முறை இலங்கை அரசுக்கு எதிராக மிகக் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்ட தீர்மானம் மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் பிரேரணைக்கான முதல் வரைபில் அத்தகைய விடயங்கள் எதனையும் காண முடியவில்லை.

தமிழ் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அம்சங்களோ அல்லது அரசாங்கத்தை போர்க்

**குருந்தூர்மலையும் தண்ணிமுறிப்பு கிராமமும் மட்டுமல்ல. முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக இடமாகிய மண்கிண்டிமலையும் அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பன்சல்கந்த என்ற சிங்களப் பிரதேசமாக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களின் தாயகப் பகுதியாகிய வடக்கு கிழக்கு பிரதேசத்தின் இதயபூமி என்று கருதப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இந்த நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் இனப்பரம்பல் நிலைமையைத் தலைகீழாக்குகின்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.**

குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான அம்சங்களோ அதில் இடம்பெறவில்லை. இலங்கை அரசுக்கு சிக்கல்களை ஏற்படுத்தும் வகையில் இம்முறை மனித உரிமைகள் பேரவையின் நடவடிக்கைகள் அமைந்திருக்கும் என்ற எதிர்பார்ப்பும் உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்தகைய நெருக்கடிகளை உருவாக்கத் தக்கதாக அந்த பிரேரணை வரைபு காணப்படவில்லை. இதனை விடயமறிந்த பலரும் ஏமாற்றத்துடன் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

## முதலிடத்தில் பொருளாதாரக் குற்றங்கள்

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழமை என்பதற்கொப்ப, தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் அநியாயங்களாகிய போர்க்குற்றச் செயற்பாடுகளுக்கும் நீதி நியாயம் கிடைக்க வேண்டும் என்பது நீண்ட கால கோரிக்கையாகும். நீண்ட கால எதிர்பார்ப்பும் ஆகும். ஆனால் இந்த வருடம் மனித உரிமைகள் அமர்வில் நாட்டின் பொருளாதாரக் குற்றங்களும் போராட்டக்காரர்களுக்கு எதிராக அவசரகால விதிகளையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள அடக்குமுறைகள் உரிமை மீறல்களும் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றன. இதனால் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளும் நீதிகோரலுமாகிய விடயங்களுக்கான முக்கியத்துவம் குறைந்திருக்கின்றது என்ற உணர்வு பல தரப்புக்களில் காணப்படுகின்றது.


ஐநா மன்றத்தின் மனித உரிமை ஆணையாளரையும் மனித உரிமைப் பேரவையையும் மிகுந்த நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு இப்போதைய ஜெனிவா நிலைமை மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது. இது துரதிஸ்டவசமானது.

## ஒன்றிணைவும் இராஜதந்திரச் செயற்பாடும்

அஹிம்சை வழியிலான போராட்டங்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரத் தவறியதையடுத்து, ஆ,யுத வழிப்போராட்டத்தின் மீது தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால் வலிமையாக முன்னெடுக்கப்பட்ட ஆ,யுதப் போராட்டமும் தோல்வியைத் தழுவியதையடுத்து, அவர்கள் சர்வதேச நாடுகளையும் ஐநா மனித உரிமைப் பேரவையையும் தமது மீட்பராக நம்பியிருந்தார்கள்.

ஆனால் யுத்தம் முடிவடைந்து 13 வருடங்கள் நிறைந்துவிட்ட நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிட்டவில்லை. அத்துடன் போர்க்காலத்திலும் பின்னரும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் போர்க்குற்றங்கள், இன அழிப்பு நோக்கிலான பாதிப்புக்கள் என்பவற்றுக்கு நீதி நியாயமும் கிடைக்கவில்லை. அரசியல் தீர்வுக்கான கோரிக்கையும் நீதி நியாயக் கோரிக்கையும் இன்னும் தாமதமாகி தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை பெரும் ஏமாற்றதிற்குள் தள்ளியிருக்கின்றன.

ஐநா மனித உரிமைப் பேரவை தன்னால் இயன்ற அளவில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்திருக்கின்றது. அது விடயத்தில் அது தனது முயற்சிகளை முற்றாகக் கைவிடவில்லை. ஆனால் பொறுப்புகூறுலுக்கும் அரசியல் தீர்வு காண்பதற்கும் உரிய மையப்புள்ளியை நோக்கி இலங்கையை நகர்த்திச் செல்வதற்கான பேரவையின் பிரேரணைகளும் அறிக்கைகளும் இன்னும ஏட்டளவிலேயே காணப்படுகின்றன. செயல்வல்லமை



கொண்ட நிலைமைக்கு நகரவில்லை என்பதே இப்பொதுள்ள பிரச்சினையாகும்.

அதேவேளை, வல்லரசு நாடுகளும் ஏனைய ஜனநாயத்தின் மீது நம்பிக்கையும் மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் உறுதிப்பாட்டையும் கொண்டுள்ள நாடுகளும் உறுப்புரிமை பெற்றுள்ள ஐநா மனித உரிமைப் பேரவையின் செயல் வல்லமைச் சூழல், சர்வதேச அரசியல் பொருளாதார, பாதுகாப்புச் சுழல்களிலான வகிபாகம் என்பவற்றின் அடிப்படையிலேயே மனித உரிமைகள் பேரவையின் நோக்கும் நோக்கும் செயல் வல்லமையும் அமைந்திருக்கின்றன என்பதை தமிழ் மக்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் மறந்துவிடக் கூடாது.

தமிழ் மக்களுக்கு நியாயம் தேடுகின்ற தமிழ் அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களும் ஐநாவினதும், ஐநா மனித உரிமைப் பேரவையினதும் செயல் சுழல் புள்ளியின் தன்மையைக் கண்டறிந்து அதற்கேற்ற வகையில் காய் நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். அதேவேளை, உலக நடப்பு உலகப் போக்கு என்பவற்றைச் சரியாக நாடிப்பிடித்தறிந்து அதில் காணப்படுகின்ற இடைவெளிகளின் ஊடாகத் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அவசியமும் இப்போது உணர்த்தப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றிலும் அரசியலைக் காண்கின்ற போக்கையும் எல்லாவற்றிலும் அரசியல் செய்கின்ற செயன்;முறையையும் கைவிட்டு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து இறுக்கமான ஒரு கட்டமைப்பின் கீழ் இராஜதந்திர வழிகளில் நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்த ஒன்றிணைவும் இராஜந்திரச் செயற்பாடும் மனித உரிமைகள் பேரவையுடனான செயற்பாடுகளில் மட்டுமல்ல. உள்நாட்டில் அரசாங்கத்தைக் கையாள்கின்ற விடயங்களிலும் அவசியமாகியிருக்கின்றது. ராஜபக்ஷக்களின் தலைமையிலான ஆட்சிகளின்போது வெளிப்படையான தமிழர் விரோதச் செயற்பாடுகள் இடம் பெற்றிருந்ததைப் போலவே, பன்மைத்தன்மையுடனான மென்மையான அரசியல் போக்குடையவர் என்று கருதப்படுகின்ற ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஆட்சியிலும் அதே நிலைமையே தொடர்கின்றது.

குறிப்பாக ஜெனிவாவில் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளில் இலங்கை விவகாரம் சூடு பிடித்துள்ள சூழலிலும்கூட தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள மயமாக்குவதற்கான கபளிகர நடவடிக்கைகள் துணிகரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. நீதியும் அரசியல் தீர்வும் கேட்டு அதனை வலியுறுத்தி வடக்கு கிழக்குப் பிரதேசம் எங்கும் மெற்கொள்ளப்பட்டுள்ள 100 நாள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்டப்டுள்ள உரிமை மீறல் நடவடிக்கைகளும் அச்சுறுத்தல் செயற்பாடுகளும், சர்வதேசத்தின் அழுத்தத்தை எந்த அளவில் மதித்துச் செயற்படுகின்றது என்பதை வெளிப்படுத்தவதாக அமைந்துள்ளது. குறிப்பாக முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆக்கிரமிப்பு விவகாரத்தில் நீதிமன்ற உததரவையும் மீறி, குருந்தூர்மலையில் விகாரை அமைக்கப்பட்டிருப்பதுடன் அந்த மலையை அண்டிய தண்ணிமுறிப்பு தமிழக்கிராம மக்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த 632 ஏக்கர் காணிகளையும் தொல்பொருள் திணைக்களத்திற்கு உரிய காணிகள் என அடையாளப்படுத்தி எல்லைக்கற்கள் பதிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கை பகிரங்கமாகவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதனை எதிர்த்து முல்லைத்தீவு மக்கள் ஒரு தொடர் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

குருந்தூர்மலையும் தண்ணிமுறிப்பு கிராமமும் மட்டுமல்ல. முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக இடமாகிய மண்கிண்டிமலையும் அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பன்சல்கந்த என்ற சிங்களப் பிரதேசமாக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களின் தாயப்பகுதியாகிய வடக்கு கிழக்கு பிரதேசத்தின் இதயபூமி என்று கருதப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இந்த நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் இனப்பரம்பல் நிலைமையைத் தலைகீழாக்குகின்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.




# கேள்விக்கு உள்ளாகும் கேள்வி ஞானம்

**“வாசிப்பதன் மூலம் இவர்களால் கேட்க முடியும். எழுதுவதன் மூலம் வாசிக்க முடியும்’’**

**அரிது** அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதனினும் அரிது குருடு, செவிடு பேடு இன்றிப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். ஆனால் அப்படி ஒரு வரம் கிடைத்தாலும், இந்த மனிதன் மனிதத்தோடு நடந்து கொள்கிறானா?

செவிப்புலன் அற்றவரை , வாய் பேச முடியாதவரை பூமிக்கு பாரமென்று கொன்றொழித்தவர்கள் எமது முன்னோர்கள்...போருக்கு லாய்க்கற்றவர்கள் என்று முத்திரை குத்தி, இப்படியானவர்களைக் கொன்றதாக எமது சரித்திரம் கூறுகின்றது.

‘இந்தியாவில் 1652–க்கும் மேற்பட்ட மொழிகள் பேச்சு வழக்கில் உள்ளன. 2001 அல் எடுத்த ஒரு கணிப்பின்படி, இந்தியாவில் 29 மொழி



கள் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்றன. 122 மொழிகள் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்றன–’

இது விக்கிபீடியா தரும் தகவல். உலக நாடுகளைப் பார்த்தால் சுமார் 6500க்கும் மேற்பட்ட மொழிகள் உலகளவில் பேசப்படுகின்றன. இதில் 2000க்கும் மேற்பட்ட மொழிகளை பேசுவோரின் எண்ணிக்கை 1000க்கும் குறைவானது. 150–200 மொழிகள் மட்டுமே 10 லட்சத்திற்கு அதிகமான மக்களால் பேசப்படுகின்றன. மொழிகள் பல இருந்தாலும் பல மொழிகள் பேசுவோர் இன்றி அழிந்து விட்டதையும், பேசும் மனிதர்கள் தொகை அருகி அருகி இனிவரும் கால்ஙகளில் இல்லாதொழிந்து போகலாம் என்பதும் நமக்குத் தெரிகினறது.

## மொழிகளின் மூத்தவர்

மொழிகளில் மூத்தவர் யார் என்ற கேள்விக்கு பதில் சைகை மொழி என்றால் ஆச்சரியமாக உள்ளதா?.

வாயை மூடி விரல்களாலும் பேச முடியும். சொல்லப்போனால் விரல்களால் பேசியதுதான் [சைகை மொழி] மனிதனின் முதல் மொழி என்பதை நீங்கள் ஏற்பீர்களா?

சைகை மொழி என்பது, பலவித கை வடிவங்கள், கை அசைவுகள் மற்றும் முக பாவனைகளுடன் பேசப்படுவது.மனிதன், தன் தேவைகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த பயன்படுத்திய முதல் மொழி, சைகை மொழிதான். ஆண்டுதோறும் செப்., 23 அன்று சர்வதேச சைகை மொழி தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.மனிதர்கள் உலக நாடுகளெங்கும் பேசும் பல மொழிகள் காணாதொழிந்து விட்டமை போல, பல வகைகளாக இருந்த சைகை மொழிகளிலும் சில அழிந்து விட்டன் . பாமினி எழுத்துருவுக்கு நாம் கணனி உலகில் ஒரு தனித்துவமான , எல்லாலோராலும் வாசிக்க முடிந்த யூனிவேர்சல் எழுத்துரு என்று கொடுத்த மதிப்பு , துரதிஷ்டவசமாக எந்த ஆதிகால சைகை மொழிக்கும் கிடைக்கவில்லை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மனிதனால் அறியப்பட்ட Plains Indian Sign Language சைகை மொழிதான் , சரித்திரத்தில் மிக முக்கியமானதும் முதன்மையானதுமாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று அது மிக அரிதாகவே பாவனையில் இருந்து வருகின்றது. இப்படியொரு நிலையால், Plains Indianø\øP மொழியில் சிறந்து விளங்கிய பல பூர்வீகக் குடிமக்கள் இன்று அருகி வருகிறார்கள்..டச்ணஞ் ஞச்நீடு என்ற பெயராலும் இந்த ஆரம்ப சைகை மொழி அழைக்கப்பட்டது. மரணப் படுக்கையில் கிடக்கும் இந்த மொழிக்கு உயிர் கொடுக்க தீவிர முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

அமெரிக்க பெரு வெளிகளில்[கூடஹு கநீச்டிணண்] பல இனத்தவர்கள் வேட்டைக்காக வந்து ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டபோது, தொடர்பாடல் தேவைப்பட்டுள்ளது. அப்படியான தருணங்களில் இந்த அமெரிக்க இந்தியர்கள் சைகை மொழி மூலமே கருத்துப் பரிமாற்றம் செய்துள்ளார்கள்.

இன்னொரு தொன்மையான சைகை மொழியாக இருப்பது , 16ஆம் நூற்றாண்டில் Abbe Charles&Michel de L‘Epee என்ற பிரெஞ் நாட்டவரால் அறிமுகம் செய்யப்பட்டது. ஒவ்வொரு எழுத்தையும் கை விரல்களால் அடையாளப்படுத்தி, கைகள், புஜங்களைப் பயன்படுத்தி தொடர்பு கொள்ளும் முறையே இது. ஒரு காலத்தில் ஐரோப்பிய கண்டத்தில் , செவிப் புலன் இழந்தோரிடையே இந்தச் சைகை மொழி (LSF), தன்னிகரற்ற ஒன்றாக இருந்துள்ளதோடு , மிகப் பிரபல்யமாகவும் இருந்துள்ளது.

## தற்போதைய வழக்கு


இன்றைய நாட்களில் அமெரிக்க சைகை மொழியும்,(ASL) பிரித்தானிய சைகை மொழியுந்தான்(BSL). வழக்கிலிருக்கின்றன. ஏற்கனவே குறிப்பிட்ட பிரெஞ்(LSF) சைகை மொழியின் அடிப்படை உருவாக்கத்தை வைத்துக் கொண்டுதான் இந்த அமெரிக்க சைகை மொழியை Thomas Gallaudet என்பவர் 1616இல், வட அமெரிக்காவிலிருந்து எடுத்து வந்துள்ளார் . இந்த இரண்டு மொழிகளுக்கும் இடையில் 60சதவீத ஒற்றுமை இருப்பதை அவதானிகள் ஒப்புக் கொள்கிறாாகள்..ஆனால் அதே சமயம் இந்த அமெரிக்க சைகை மொழி அறிவுள்ளவரால், பிரெஞ் சைகை மொழி பேசுபவருடன் சுலபமாக தொடர்பாடல்களைச் செய்ய முடியாது. இன்று சர்வதேச அரங்கில் மிகப் பிரபல்யமாக இருப்பது இந்த சைகை மொழிதான்!



ஜேம்ஸ் ஞானேந்திரன்

## ஒரு நவீன சைகை மொழி

மேல்கூறப்பட்ட சைகை மொழிகளுக்கு அப்பால் Nicaraguan Sign Language என்றொரு சைகை மொழியும் வழக்கிலிருக்கின்றது. இது 70–80களில் வடிவமைக்கப்பட்டது. 70களில் செவிப் புலனற்றோரின் கல்விக்காக, தரமான பல பாடசாலைகள் உருவாகின. செவிப் புலனற்றோருக்கான கல்வியை ஒரே இடத்தில் வைத்துக் கொள்ளவது நல்லது என்று கருதப்பட்டமையால் , கல்வி குறிப்பாக மத்திய அமெரிக்க நாடான நிக்கராகுவாவில் வழங்கப்பட்டது. எனவே இந்த முறைச் சைகை மொழியுடன் நாட்டின் பெயரும் ஒட்டிக் கொண்டது. இது ஸ்பானிய சைகை மொழியிலிருந்து மு்றறிலும் வேறுபட்டது.




இந்தச் சைகை மொழி என்பது பூகோளரீதியாக, அந்தந்த நாட்டு மொழிகளைப் போல் எப்படி எப்படியெல்லாம் உரு மாற்றம் பெறுகின்றது என்பதை உலகம் இங்கே கண்டு கொள்ள முடிந்தது..

## வேண்டப்படாத வலுவிழந்தோர்

உலக சரித்திரத்தை நோக்கும்போது, செவிப்புலனற்றவர்களை, சமுதாயம் வேண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைத்திருந்தமை தெரியவருகின்றது. இவர்களைச் சமுதாயத்தில் ஒதுக்கியதோடு திருப்த்தியடைந்து விடாமல், ஆளையே ஒரேயடியாக முடித்து விடும் வெறியில் இருந்துள்ளார்கள். Spartans என்று அழைக்கப்பட்ட புராதன கிரேக்க நாட்டவர்கள், வலுவிழந்தவர்களை மலை உச்சியிலிருந்து உருட்டிவிடும் கொடுமையைச் செய்திருக்கிறார்கள் ரோமர்களோ தைபர் நதிக்குள் தூக்கி வீசினார்கள். யுத்த காலத்தில் உதவாத இவர்கள் வாழ வேண்டியவர்கள் இல்லையென்று அப்பொழுது முடிவெடுத்தார்கள்..ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் வந்த காலத்தில், செவிப் புலனற்றோரை பைத்தியக்காரர் விடுதியில் அடைத்து வைப்பது வழமையில் இருந்துள்ளது. கோவில்களுக்குள் நுழைவதோ. திருமணம் செய்து கொள்வதோ இவர்களால் இயலாத ஒன்றாக இருந்துள்ளது. கி.முன்னரான காலத்தில் அரிஸ்ரோட்டிலின் கூற்றின்படி பேசமுடியாது, செவிப்புலனையும் இழந்தவர்களுக்கு எதையும் கற்பிக்க முடியாது என்று பகிரங்கமாக்க கூறியது. இவர்களுக்கு பெரும் சாபமாக அமைந்தது. அடுத்த 2000 வருடங்கள் இந்தச் சாபத்தின் தாக்கம் தொடர்ந்தது. குடியுரிமை, சமய உரிமை என்று எல்லாமே பறிக்கப்பட்டு அனாதைகளாக உயிர் நீத்துள்ளாாகள் என்பது பழைய கிரேக்க சரித்திரம்.




இப்படியொரு கேவலமான நிலையில், 16ம் நூற்றாண்டில் இவர்களுக்கு விடிவுகாலம் பிறந்தது.

வாசிப்பதன் மூலம் இவர்களால் கேட்க முடியும். எழுதுவதன் மூலம் வாசிக்க முடியும் எனற புரட்சிகரமான கருத்தை முன்வைத்து இத்தாலிய மருத்துவரான Girolamo Cardano அரிஸ்ரோட்டலின் அறிக்கையை கேள்விக் குறியாக்கினார். ஸ்பானிய மதகுருவான Pedro Ponce de Le2n உம், Vicente de Santo Domingo என்பவரும் இந்த வலுவிழந்தோருக்கு கல்வி கற்பிப்பதில் தீவிரமாக உழைத்திருக்கிறார்கள் என்பது சரித்திரம் தரும் தகவல்.1545இல் முதன் முதலாக ஒரு பதிவு செய்யப்பட்ட, செவிப் புலனற்றோருக்கான பாடசாலையை Ponce de Le2n என்பவர் நிறுவியுள்ளார்.

## இன்றைய கோலம்

மூளையில் பாதிப்பு ஏற்பட்டவர்களாலும் சைகை மொழியை புரிந்து கொள்ளவும், சைகை மொழியில் பேசவும் முடியும். ஆனால் அவர்கள் சைகை மொழிக்கான இலக்கணத் தன்மையுடன் பேச மாட்டார்கள். அமெரிக்க சைகை மொழியில் ஆங்கில எழுத்துகள் ஒரு கையினால் காண்பிக்கப்படுகிறது. ஜெர்மன் மற்றும் இங்கிலாந்து சைகை மொழிகளில் இரு கைகளால் ஆங்கில எழுத்துகள் உணர்த்தப்படுகின்றன. பெண் மற்றும் பெண் தொடர்பான சைகைகள் தாடையின் அருகில் கைகளைக் கொண்டு செய்து காண்பிக்கப்படுகின்றன. ஆண் தொடர்பான சைகைளை குறிக்க நெற்றியின் அருகே கைகளைக் கொண்டு சைகை செய்யப்படுகிறது.



உள்ளங்கையின் உதவியால் திசைகளை கூறுவார்கள். ஒரே சைகையை இரு அசைவுகளாக காண்பிப்பது இரு வேறு அர்த்தங்களை குறிக்கும். அமெரிக்காவில் 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் சைகை மொழியை பயன்படுத்துகிறார்கள்.

வலுவிழந்தோர் இன்று வலுவிழந்தவர்களாகவே வாழ்வில் ஒதுங்கவில்லை. பண்டைக்கால ரோமர்கள் கிரேக்கர்களைப் போல இன்றைய சமுதாயம் இவர்களை ஒதுக்கவுமில்லை. குறிப்பாக ஐம்புலன்களின் குறைபாடுகளைச் சொல்லி அழைப்பதை நிறுத்தி, வலுவிழந்தோர் என்ற பதத்தையே பயன்படுத்துகிறார்கள். வியக்கத்தகு சாதனைகளைச் செய்து வரும் இவர்கள்,இன்னும் பல மடங்கு முன்னேற, இந்தச் சைகை மொழி என்பது பெரும் பங்கு வகிக்கின்றது என்பதுவே, இன்றைய யதார்த்தம் ஆகும்.



## கொண்டாட்டங்கள்

கொண்டாட்டம் ஏதும்
எண்டால்
சொந்தங்கள் சூழ்ந்துவிடும்
தேனீக்கள் தோற்றுவிடும்
ஒற்றுமையைக் கண்டு
பாட்டியின் வழிகாட்டலில்
பேத்திகள் பம்பரமாய்
வேலைகள் முடித்திட
பாரம்பரிய முறைகளை
தாத்தா கூறிட
சின்னஞ் சிறுசுகள்
வண்ணத்துப் பூச்சிகளாய்
வட்டமிட்டுக் கலகலக்க
உறவுகள் யாவும்
அன்பைப் பகிர்ந்து
முறை தவறாது
நடைபெறும் சடங்குகள்
இயந்திர உலகில்
இன்று காண்பதற்கரிது.



டக்சானா







பண்பு நிறைந்த குலமெங்கள்
பாரில் பெருமை மிக்கதுவாம்
கண்ணைப் போல
காத்திடுவோம்
கருத்தாய் கொண்டு
சேர்த்திடுவோம்
விண்ணை முட்டும் இலக்கியத்தை
விருந்தாய்ப்
பிள்ளை படிக்கட்டும்
எண்ணம் முழுதும் எம்தமிழர்
ஏற்றம் காணச் செய்திடுவோம்

கனவில் எம் மண் இல்லத்தை
காணுகின்றோம்
வெளிநாட்டில்
தினமும் எண்ணம் தாய்நாட்டில்
தீராக் காதல் மருதத்தில்
வனங்கள் வாய்க்கால்
வரப்புகளில்
வளங்கள் காணக்
கோடியின்பம்
நனவாய் வேண்டும் அந்நாளும்
நாடு கின்றேன் இறையருளை

முற்றம் முழுதும் மல்லிகையில்
மூழ்கி நானும் போக வேண்டும்
சுற்றம் முழுதும் எனைக்கண்டு
சூழ்ந்து நின்று பேசவேண்டும்
குற்றம் இல்லாக் காற்றை நான்
கூடி நின்று சுவாசிப்பேன்
உற்ற நண்பி ஓடி வந்து
உயிரும் உருகப் பேசிடுவாள்

கோடி ஏக்கம் எம் நெஞ்சில்
கொள்ளை கொள்ளும்
நினைவுகளால்
நாடி வாழும் என் உயிரும்
நாளும் புலனும் நம் மண்ணில்
வாடிப்போகும் என்னுள்ளம்
வாழ்வும் புலத்தில் மரணித்தால்
ஓடி ஓர் நாள் வாராதோ
ஊரில் சென்று வாழ்வதற்கு



ஜெயஸ்ரீ சதானந்தன்
பிரித்தானியா

## வேள்வி



குறிஞ்சியூர் வில்லரசன்

மந்திரங்களின் சப்தத்தில்
பாவங்களை
எரிப்பதற்காய்
ஊற்றப்படுகின்றன
நெய்க் குப்பிகள்

புண்ணிய நதிகளின்
சிறு துளிகளை தெளித்தபடி
தொடர்கிறது
தூய்மைக்கான வேள்வி

பாவங்களை இறக்கி
வைக்கும் படி
தோள் ஏறுகின்றன
காவடிகள்..

பிரகாரத் தெருவில்
அடித்து விரட்டப்படும்
பிச்சைக்காரியின்
அவல ஓலத்தில்..

அர்ச்சனை தட்டில்
கணக்கிடப்படும்
சில்லறைகளின்
சல சலப்பில்

அக்கினிகுண்டத்திலிருந்து
எழுந்து வருகிறது
நரகத்தின் வாசனை.



## சங்கே முழங்கு

ஆதவனாய் உதயமாகி
அகிலத்தில் ஒளிக்கும்
அன்னை மொழியே
அருட்பெரும் சுடரே

சங்கம் வளர்த்த
சங்கத் தமிழே
எட்டுத் திக்கும்
எழுந்தே ஒலிக்கும்


ஏட்டுச் சுவடியில்
எழுகின்ற வரிகளாய்
கட்டுக்கலையாத காவியச்
சங்கே முழங்கு

தெள்ளுத் தமிழாய்
தேனமுதாக இனித்திடும்
செம்மொழியாய் செப்பிடும் ஆதியின்
அந்தமே

பொழிவின் எழிலாக
பொங்கிடும் புகழே
எம்மொழி எங்கும்
ஏற்றம் பெற்றிட

சங்கமம் பெருகி
சகலரும் பருக
சரித்திரம் புரள
சங்கே முழங்கு

உயிரின் ஊடலில்
உறவாடித் தளிர்க்கும்
உச்சத்தின் சிகரத்தில்
சங்காய் முழங்கே





கிருஷ் அபி
மன்னார்

## ஊமை ஆடுகள்

ஊடுருவிடும்
அதிகார முட்கள்
தரும் வலிகள்...!!
இயலாமையின்
ஊமை ஆடுகளுக்கு
பழகியதொன்று..!!
பயிர் நிலங்கள்
கட்டப்பட்ட ஆடுகளின்
கயிறுகளால்
மேயப்படுவதும்
புதிதன்று...!!
காலனித்துவ அணில்கள்
கொறித்து
எஞ்சிய பழத்துள்
எத்தனை திண்டாட்டம்..!!
எத்தனை அடக்குமுறை..!!
சதைகளின் ஆக்கிரமிப்பில்
விதைகள்
அழிந்து
விடப்போவதில்லை
ஆனாலும்
குருவிகள்
அக் கிளையை விட்டு
பறப்பதாயில்லை



பாலா
சயந்தன்



# வாசகர் கணைகள்

**கடந்தவார 15.09.2022 இரண்டாம் எலிசபத் மகாராணிக்கான இரங்கல் சிறப்பிதழ் பற்றிய வாசகர் கருத்துக்கள்**



தமிழருவியின் கடந்த வார இதழானது ஆளுமை மிக்க ராணியின் வாழ்க்கையை ஆரம்பம் முதல் இறுதிவரை எமது கண்முன்னே கொண்டுவந்து பரிசளித்தது.அதில் ராணியாரின் ஆளுமை,அதிகாரம்,சேவை என்பதற்கு அப்பால் அவரின் மற்றைய முகத்தை காட்டிய ஒரு கட்டுரையே 'நாய்களுக்கு ஒரு தாய்மடி' .சிறப்பானதொரு விடயமாகும். இந்த இதழில் நான் மகாராணியார் பற்றி புதிதாய் அறிந்து கொண்ட ஒரு விடயமும் இதுவாகும். வாழ்த்துக்கள்.

**த. றனிஸ்ரா, சுன்னாகம்**



தமிழருவி இதழின் வளர்ச்சி கண்கூடாக தெரிகின்றது. வாரா வாரம் கால மாற்றத்திற்கேற்ப புதிய பல விடயங்களை சுமந்தே பயணிக்கிறது. உண்மையில் இந்த இதழில் மகாராணியார் பற்றி அறியாத எத்தனையோ பல விடயங்களை அறிந்து கொள்ளமுடிந்தது. தமிழருவி இதழ் ஆசிரியருக்குக்கும் நிர்வாகத்தினருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். பயணம் தொடரட்டும். தமிழருவியின் வாசகி என்பதில் பெருமிதமடைகிறேன்.

**ர.வசந்தி, பிரான்ஸ்**







மகாராணியார் பற்றிய சிறப்பிதழை இந்த வாரம் வெளியிட்ட தமிழருவிக்கு மிகப்பெரிய பாராட்டும் நன்றியும் உரித்தாகட்டும். இந்த வாரம் நிச்சயம் மகாராணியர் பற்றிய சிறப்பிதழாகவே அமையும் என ஆவலாக காத்திருந்தேன்.அது உண்மையாகிவிட்டது. மகாராணியார் பற்றி எமக்குத் தெரியாத எத்தனை பல விடயங்களை நாம் அறிந்துள்ளோம். அவருடைய ஆளுமைகள்,சேவைகள் என பல புதிய விடயங்களை தெரிந்து கொள்ளமுடிந்தது.

**வி.ஜதுசியா, ஏழாலை**



தமிழருவியில், 'அன்னங்களின் அரசி' தலைப்பில் பிரசுரமாகிய இங்கிலாந்து மகாராணியின் வாழ்க்கை வரலாறு பகுதி மிகவும் வியக்கத்தக்கதாகவும் சுவாரசியமாகவும் இருந்தது. இதன் மூலம் உலகில் உள்ள அனைவராலும் யாரிந்த எலிசபெத் மகாராணி என அறிந்து கொள்ள கூடியதாக இருந்தது. இவ்வாறான விடயங்களை பிரசுரிக்கும் தமிழருவி பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெயக்குமார் அகலியா**
**கல்லடி உப்போடை, மட்டக்களப்பு**



தமிழருவி இதழ் ஒவ்வொரு வாரமும் பல சுவாரஷ்யமான விடயங்களை சுமந்த வண்ணமே வருகிறது. அதில் இந்த வாரம் மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியார் பற்றிய சிறப்பிதழாக வெளிவந்தது. அதில் மகாராணியாரின் 70 வருட அரசாட்சியின் போது எடுக்கப்பட்ட பல புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டது. உண்மையிலே அந்தப் படங்கள் எத்தனையோ பல விடயங்களை எமக்கு விளக்கியுள்ளது.

**அ. ரம்யா, மல்லாகம்**

மகாராணி எலிசபெத் பற்றிய சிறப்பிதழ் மிகவும் அருமை. மகாராணி எலிசபெத் அவர்கள் நல்லுள்ளம் கொண்டவர் என்று அறிவேன். ஆனால் அவர் இவ்வளவு அன்புள்ளம் கொண்டவர் என்பதை தமிழருவில் வெளிவந்த மகாராணி எலிசபெத் சிறப்பிதழ் படித்து தெரிந்து கொண்டேன். படங்களே படிக்கும் ஆர்வத்தை தூண்டியது. மேம்மேலும் உயர தமிழருவிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**கீதாஞ்சலி (ஈரோடு, தமிழ்நாடு)**

ஆரோக்கியமான வாழ்வே மனிதனின் பெருஞ் செல்வம் என்பதற்கு அமைய, பணத்தில் புரண்டாலும், உணவு விடயத்தில், கட்டுப்பாடோடு வாழந்ததால்தான், ஆட்சி 70 வருடங்களுக்கு நீடித்தது என்ற நி'ஜத்தை தன் கட்டுரை மூலம் ஆணியடித்தாற் போல சொல்லியிருக்கிறார் சகோதரி பிரமிளா நாகேஸ்வரராஜா. போனஸாக ஒரு மீன் ரெசிப்பீ இணைக்கப்பட்டிருப்பது சிறப்பு!!! வெல் டன்! எழுத்துக்கள் தொடரட்டும்.

வெவ்வேறு உலக நாடுகளிலிருந்து மகாராணியாருக்கும் அந்தந்த நாடுகளுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை அழகாக, படங்களுடன் விபரித்து எழுதியிருப்பவர்கள் பாராட்டுக்குரியவர்கள் வாசகர் கணைகள் நெஞ்சில் தைக்கின்றன.

பக்கங்கள் அதிகமாக இருந்தாலும், எல்லாமே வண்ணமயமாக வடிவமைக்கப்பட்டு, வாசகர்களை தம் பக்கம் ஈர்க்கின்றன...

மலேசிய நினைவலைகள் சுவாரஸ்ஸியமாக இருக்கின்றன. ஆனால் ஒரு போட்டோதானே

இருக்கின்றது? செய்தியில் உள்ளபடி படங்கள் மிஸ்ஸிங்!!!

மகாராணியாரை பல உலக நாடுகளுடன் தொடர்புபடுத்தி, அவர் ஆளுமை எப்படி விரிந்திருக்கின்றது என்பதை தமிழ் அருவி சுட்டிக்காட்டியுள்ளது.

மொத்தத்தில் தமிழருவியின் பாய்ச்சல் அமர்க்களந்தான்...

சிறப்பான வடிவமைப்பு மேலும் வாசிக்கத் தூண்டுகின்றது.

நன்றி

**A.J.G.**
**யாழ்ப்பாணம்.**



தமிழருவி பத்திரிகையானது சிறந்த பத்திரிகையாக காணப்படுகிண்றது.

அதிலும் மகாராணியை பற்றிய விடயங்கள் சுவாரஸ்ய மாணது.

ஒவ்வொரு பக்கங்லும் பல புதிய விடயங்களை சுமந்து வந்துள்ளது.

**பவ்சுல் அமீன்**
**மொஹமட் பவாஸ்**

# உல்லாசப் பிரயாணிகளின் உணவுப்பட்டியலில் நீங்காத அப்பம்



**இவ்வுலகில்** வனப்பிரதேசங்கள், வானைத் தொடும் மலை முகடுகள் அதிலிருந்து ஊற்றெடுக்கும் கங்கைகள், பறவைகள் போன்றவைகள் அழகிற்கு அழகு சேர்ப்பவையாக உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 27ம் நாளில் உலக சுற்றுலா தினம் 1980 ம் ஆண்டிலிருந்து உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. மனிதன் பிறந்து பண்பாடு, நாகரீகம், கலாச்சாரம் பற்றி அறிய முற்பட்ட போதே சுற்றுலா தோன்றியது போலும் ஆனால் இன்றாே உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார துறைகளில் ஒன்றாக சுற்றுலாத் துறை மாறியதோடு இரண்டாவது மிகப் பெரிய தொழிலாக போக்குவரத்துத்துறை, உணவுத்துறை, இடவசதி, ஓய்வு மற்றும் கேளிக்கை என 5 துறைகளை சார்ந்தும் விளங்குகிறது.

## சுற்றுலாக்கள் பலவிதம்

1 சுற்றுச் சூழல் சுற்றுலா
2 பாரம்பரிய சுற்றுலா
3 கலாச்சார சுற்றுலா
4 கல்வி சுற்றுலா

இன்றைய மனிதன் இன்பம், இறைதேடல், பொழுது போக்கு, அறிவு வளர்ச்சி இவற்றில் ஏதேனும் ஒன்றை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பயணமே சுற்றுலா எனலாம். சுற்றுலா செல்ல விரும்பாத மனிதர்கள் என்று இந்த உலகில் யாரும் இருக்க மாட்டார்கள். இந்த சுற்றுலா நடவடிக்கையானது மனிதர்களுக்கு பலவிதமான நன்மைகளை தருகின்றது. தொடர்ந்து ஒரே இடத்தில் இருப்பதனாலும், வேலை நெருக்கடிகளாலும் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படுகின்றது இவற்றில் இருந்து வெளியேறி அழகான அமைதியான இடங்களுக்கு பயணம்

செய்வதால் மன அமைதியும், பல புதுமையான அனுபவங்களும் கிடைக்கின்றன. வாழ்க்கையிலே பணம், புகழ் என்பவற்றை தாண்டி இவ் வகையான அனுபவங்கள் மிகவும் அவசியம்.



## சிறகடிக்கும் ஆசை

சுற்றுலாவுக்கு அடிப்படையாக இரண்டு தேவைகள் இருக்கின்றன, ஒன்று பணம் மற்றொன்று நேரம். பணமிருக்கும் பலருக்கு நேரம் இருப்பதில்லை.நேரம் இருக்கும் பலருக்கு பணம் இருப்பதில்லை.

வாய்ப்பு கிடைக்கும் போது அல்லது வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு மனதிற்கு அமைதி தரும் சுற்றுலா பயணம் செல்வோமே. இந்த சிந்தனையானது மக்கள் மத்தியில் இன்று அதிகம் வளர்ச்சியடைந்து வருவது வரவேற்கத்தக்கது.



## இன்றைய உலகும் சுற்றுலாத் துறையும்

இன்று உலகத்தில் எந்த மூலையில் ஓர் அழகான இடம் அமைந்திருந்தாலும் அந்த இடங்களை நோக்கி மக்கள் குவிகின்றனர். சமூக வலை தளங்கள்

சுற்றுலா துறையினை மேலும் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி வருவதே பிரதான காரணம்.

## சுற்றுலா நினைவுகள்

சுற்றுலா வெறும் பயணத்தோடு மட்டும் நிறைவு பெறாது. நம் நண்பர்களோடு பயணம் செய்த நினைவுகள், ஒன்றாக அமர்ந்து உணவு உண்ட நினைவுகள், உறவினர்களுடன் அரட்டை அடித்த சுற்றுலா நாட்கள் இது மாதிரியான பல நினைவுகளை கூறும் வகையில் அமைந்திருக்கும்.

அழகான பயணங்கள் எப்போதும் எம்மை மகிழ்விப்பனவாகவும் பல புதிய விடயங்களை கற்றுத் தருவனவாயும் மன அழுத்தத்தினை குறைப்பதாகவும் அமைகின்றது. மனித வாழ்க்கையும் ஒரு நதி போல நகர வேண்டுமே தவிர தேங்கி நிற்கக் கூடாது புதிய புதிய அனுபவங்களை பெற்றிடுவது தான் மனித பிறப்பின் மகத்துவமே.

## தின்ன தின்ன ஆசை

உணவுகள் பலவிதம் அதி்ல் சைவம், அசைவம்,செட்டிநாடு,சைனீஸ்,வெஸ்டர்ன் என பல விதமான உணவு வகைகள் இருக்கின்றன ஆனாலும் இந்த பால் அப்பம் இருக்கே இதன் சுவையை மட்டும் எந்தவொரு சாப்பாட்டாலும் ஓரங்கட்ட முடியவில்லை என்பது நூறு வீதம் உண்மை இப்போது பூ மாதிரி ஆறு இதழ்கள் பூத்த அப்பம் எல்லாம் கூட சுடுகின்றனர். பார்க்க அப்படியே மனச அள்ளுது. குறிப்பாக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டெம்பர் வரை சுற்றுலா பயணிகளின் வருகை இடம்பெறும் அப்போது உணவுச் சாலைகள் உல்லாசப் பயணிகளால் களைகட்டும். சுற்றுலாப் பயணிகள் எங்கு சென்றாலும் அங்குள்ள கடைகள், உணவகங்களில் அந்நாட்டு உணவு வகையான தெரு உணவுகள், கலாச்சார பொருட்களை பெற்றுக் கொள்ளக்கூடிய அமைப்பை அந்தந்த நாடுகள் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமானது.



## பூ அப்பம் மனச அள்ளுது

இப்படித்தான் ஒருமுறை 'நொன் ஸ்டிக் அப்பச்சட்டி வாங்கிட ஆசையாடே பாத்திரக் கடைக்கு ஒரு அம்மணி போயிருந்தா. கடை முழுவதும் சுத்திப் பாத்துட்டா அவ தேடினது கிடைக்கேல்ல என்னதான் வேணும் என்று குழம்பிய சேல்ஸ் மென்னிடம் பூ போட்ட அப்பச்சட்டி கேட்க, சேல்ஸ் மென் கடுப்பாகி எனக்கு பாத்திரக் கடையில 35 வருட அனுபவம் நீங்க கேட்ட பூ அப்பச்சட்டி எங்கேயும் கிடைக்காது எனச் சொல்ல அப்பச்சட்டியில் விளிம்பெல்லாம் இதழ்கள் போன்று இருந்தா தானே பூ மாதிரி அப்பம் சுடலாம்? விழாவொன்றில் தான் பார்த்ததை அவ சொல்லவும் அவர் அவவை மேலிருந்து கீழாக ஒரு பார்வை பார்த்துவிட்டு போமா போய் உன் மாமியாரிடம் கேளு வாங்கித் தருவா என்றபடி வேறு பக்கம்


பிரமிளா
நாகேஸ்வரராஜா

போய் விட்டார். விழி பிதுங்கி நின்ற அவவை கடையில் நின்ற மற்றுமொரு பெண்மணி பூ மாதிரி அப்பம் வார்க்க சூடான அப்பச் சட்டியில் மாவை ஊற்றி லாவகமாக எல்லாப் பக்கமும் திருப்பினா அப்படி டிசைன் வரும் என்ற சூட்சுமத்தை சொல்லிக் கொடுக்க இனிமேல் அப்பமும் வேண்டாம் அவமானமும் வேண்டாம் என தன்னையே நொந்த படி தன் நன்றியை தெரிவித்து விடை பெற்றவ இன்று அப்பம் சுடுவதில் ஸ்பெஷலிஸ்டாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அப்பம் சுடுவது பெரும் திறமை, சுட்டெடுக்கும் விதமாே தனியழகு.

## அறிமுகம்

அப்பம் இலங்கையில் அதிக அளவில் உண்ணப்படும் ஓர் உணவாகும். இது வெள்ளை அரிசிமாவிலே செய்யப்படுகின்றது. இவை வெள்ளையப்பம், பாலப்பம், முட்டை அப்பம் என பல வகையில் கிடைக்கின்றது. அப்பம் சுடுவதற்கான பாத்திரம் அப்பச்சட்டி இதன் வடிவத்திலே தான் அப்பமும் இருக்கும். அப்பம் தானே அதில் என்ன ஸ்பெஷல் என்று பலர் நினைக்கலாம். இந்த அப்பம் நிறையப் பேருக்கு சரியாக வரவில்லை என்று சொல்லி கேட்டதுண்டு.

இனி யாவரும் சுடலாம் அப்பம் ஈஸியாக

## இன்ஸ்டன்ட் அப்பம்




1 மாரி பிஸ்கட் - 3
2 வெள்ளை அரிசி மா - 3 கப்
3 இளநீர் - ஒரு முழுத் தேங்காயின் நீர்
4 தேங்காய்ப்பால் - 1கப்
5 ஈஸ்ட் - 1தேக்கரண்டி
6 சீனி -1தேக்கரண்டி
7 உப்பு - சிறிதளவு
8 தண்ணீர் -தேவைக்கேற்ப

மேலும் பால் அப்பம் சுட கெட்டியான தேங்காய்ப்பால் தனியாக வைத்திருக்கவும்.

## செய்முறை

மாரி பிஸ்கட்டை தூளாக்கி ஒரு கப்பில் போட்டு அதனுடன் சீனி மற்றும் ஈஸ்டை சேர்த்து நகச்சூடான வெந்நீர் அரை கப் விட்டு கலக்கி 10 நிமிடம் வைக்கவும். இன்னொரு பாத்திரத்தில் வெள்ளை அரிசிமாவை போட்டு அதனுடன் சிறிதளவு உப்பு சேர்த்து இளநீர் மற்றும் தேங்காய்ப்பாலுடன் கப்பில் கலந்து வைத்திருக்கும் ஈஸ்ட் கலவையுடன் மேலதிகமாக தண்ணீர்

தேவைப்பட்டால் சேர்த்து கட்டியில்லாமல் கலக்கவும். கையால் ஊற்றி விடும் பதம் சரியானது. இதனை ஒரு மூடி போட்டு 1 மணி நேரம் புளிக்க விடவும். அப்பச்சட்டியை எண்ணெய் பூசி தயாராக்கி அடுப்பில் வைத்து சூடாக்கி சட்டி நன்றாக சுட்ட பிறகு ஒரு குழிக்கரண்டி மாவை அப்பச்சட்டியில் விட்டு கைப்பிடி இரண்டையும் பற்றித் தூக்கி சுழற்றி

ஒரு முழு வட்டம் அடிச்சு மாவினை பரவ விட்டு மீண்டும் அடுப்பில் வைத்து மூடி போட்டு தீயை குறைத்து வேகவிடவும். அடிக்கடி வெந்து விட்டதா என மூடியை திறந்து பார்க்கக் கூடாது மதியமாக நேரம் கணக்கிட்டு மூடியை திறக்க ஓரங்கள் லேசாக கிளம்பியிருக்கும் ஒரு தட்டைக் கரண்டியை விட்டு அப்பத்தினை வெளியே எடுக்கவும்.

அடுப்பை சரியான சூட்டில் கூட்டிக் குறைப்பது உங்களின் சாமர்த்தியம்.

நொன் ஸ்டிக் அப்பச்சட்டி என்றாலும் கூட ஒவ்வொரு முறையும் எண்ணெய் கொண்டு துடைத்துவிட்டு அப்பம் வார்க்க மெத்து மெத்தென்று அப்பம் ஒட்டாமல் வரும்.

## சுத்துதே சுத்துதே பூமி

மாவினை வார்த்து சுழற்றி எடுத்து நடுவில் ஒரு முட்டையை உடைத்து ஊற்றி மூடி போட்டு வேக விட்டு எடுத்து தூள் உப்பு மற்றும் மிளகு தூள் தூவி பரிமாறினால் முட்டை அப்பம். இதுவே மேற்சொன்ன முறையில் மாவை ஊற்றி சுழற்றி வேகவிட்டு, இறக்க முதல் லேசாக கெட்டியான தேங்காய் பால் விட்டு இறக்கினால் அது பால் அப்பம். மேற் சொன்ன மாவினை ஊற்றி சுற்றி எடுத்து மூடி போட்டு வேகவிட்டால் அது ப்ளேன் அப்பம் இதனை சொக்லட் சாஸ் விட்டு சாப்பிட்டால் சுத்துதே சுத்துதே பூமி அந்த உணர்வு நிஜமாகும். அப்பத்துக்கு அவியல் போல பால் அப்பத்துக்கு சீனியுடன் வாழைப்பழம் தான்.

நல்ல சத்தான உணவை சுவையுடன் சமைத்து சாப்பிட்டால் சுவை, சத்து என இரண்டும் கிடைக்கும். அனைவரும் விரும்பியும் உண்ணுவார்கள்.






துன்னையூர்
ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்




மிகவும் சிறப்பான,அனுகூலமான வாரமாகும்.தொழில்சார் முன்னேற்றங்கள் மிகச்சிறப்பானதாக காணப்படும்.பணவரவு திருப்தி.எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.
அதிர்ஷ்ட நாள்- ஞாயிறு
அதிர்ஷ்ட திகதி-26




ஓரளவு அனுகூலம்.சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். தொழில்சார் பிரச்சனைகள் ஏற்படும். பொறுமை, நிதானம் தேவை.மாணவர்களுக்கு முயற்சி தேவை.
அதிர்ஷ்ட நாள்- திங்கள், அதிர்ஷ்ட திகதி-23




சிறப்பான,அனுகூலமான வாரம்.எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.பணவரவு திருப்தி. தொழில்சார் முன்னேற்றம் காணப்படும்.
அதிர்ஷ்ட நாள்- வெள்ளி, அதிர்ஷ்ட திகதி-24




சற்று அலைச்சல் நிலை காணப்படும்.சஞ்சலங்கள் அதிகமாக இருக்கும்.பணவரவு மத்திமம்.எதிர்பாராத திடீர் பிரச்சனைகள் ஏற்படும்.தாயார் வழியில் செலவீனங்கள் ஏற்படும்.
அதிர்ஷ்ட நாள்- புதன், அதிர்ஷ்ட திகதி-23




சிரமங்கள் நிறைந்த வாரமாகும்.காரியத்தடைகள் ஏற்படும்.நிதானம்,பொறுமை தேவை.குடும்ப நிலையில் சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். கல்வியில் ஊக்கம் தேவை.
அதிர்ஷ்ட நாள் - திங்கள், அதிர்ஷ்ட திகதி-25





துலாம் -ஓரளவு அனுகூலமான பலன்.எதிர்பாராத செலவீனங்கள்.பொறுமை,நிதானம் தேவை.
அதிர்ஷ்ட நாள் -வெள்ளி, அதிர்ஷ்ட திகதி-24





ஓரளவு அனுகூலம்.சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். தொழில்சார் பிரச்சனைகள் ஏற்படும். பொறுமை, நிதானம் தேவை.மாணவர்களுக்கு முயற்சி தேவை.
அதிர்ஷ்ட நாள்- திங்கள், அதிர்ஷ்ட திகதி-23





சிறப்பான,அனுகூலமான வாரம்.தொழில்சார் முன்னேற்றம் காணப்படும்.பணவரவு திருப்திகரமானதாக இருக்கும்.மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.
அதிர்ஷ்ட நாள்-ஞாயிறு, அதிர்ஷ்ட திகதி-27




சற்று மத்திமமான பலன் தரும் வாரமாகும்.பொறுமை,நிதானம் தேவை.தொழில்சார் விடயங்களில் அலைச்சல்.மருத்துவச் செலவுகள்.
அதிர்ஷ்ட நாள்- புதன், அதிர்ஷ்ட திகதி-24





மிகச்சிறப்பான,அனுகூலமான வாரமாகும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றி.தொழில்சார் முன்னேற்றங்கள்.பணவரவு திருப்தி.
அதிர்ஷ்ட நாள்-திங்கள், அதிர்ஷ்ட திகதி-25




அலைச்சல் நிலை காணப்படும்.பொறுமை,நிதானம் அவசியம்.தொழில்சார் விடயங்களில் பிரச்சனை காணப்படும்.சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு மறையும்.
அதிர்ஷ்ட நாள்- வியாழன், அதிர்ஷ்ட திகதி-24




சற்று மத்திமமான வாரம்.பொறுமை,நிதானம் தேவை.தொழில் சார் பிரச்சனைகள் இருக்கும்.பணவரவு மத்திமம்.
அதிர்ஷ்ட நாள்- ஞாயிறு,
அதிர்ஷ்ட திகதி 26




ஓரளவு அனுகூலம் தரும் வாரமாகும். குடும்ப நிலைசார் நன்மைகள் கிடைக்கும்.எடுக்கும் முயற்சி வெற்றி.மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பான பலன்.
அதிர்ஷ்ட நாள்-வியாழன்,
அதிர்ஷ்ட திகதி-23

04 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## தொல்லை தரும் தொல்பொருள் திணைக்களம்!...

தமிழா் தரப்பில் தொடுக்கப்பட்ட வழக்கின்படி இங்கு எந்தவிதமான கட்டுமானங்களையும் செய்யக்கூடாது என முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் பல இடங்களில் பண்பாட்டுச் சின்னங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பௌத்த மதம் சார்ந்தவை. அதனால், அந்த இடங்களில் எல்லாம் பௌத்த ஆலயங்களை அமைத்தால் இலங்கை முழுவதும் சிங்கள மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாகத்தான் அது பார்க்கப்படும். ஆனால், தொல்லியல் திணைக்கள வழமையின்படி பௌத்த அல்லது இந்து மதம் சார்ந்த ஆதாரங்கள் காணப்படும் போது அதனை தேசிய மரபுரிமையாகக் கருத்திற்கொண்டு அவற்றை மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனம் செய்வது அல்லது அந்த சின்னங்களை இருக்கின்ற நிலையிலேயே பாதுகாப்பது என்பதுதான் நடைமுறை.

பொலநறுவையில் 12 க்கும் அதிகமான சைவ ஆலயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் எதனையுமே பழைய நிலைக்கு மறுசீரமைத்து வழிபாட்டுக்குரியதாக மாற்றவில்லை.

அதேபோலத்தான் குருந்தூரில் பௌத்த சின்னங்கள் சிங்கள மக்களுக்குரியதா, தமிழ் மக்களுக்குரியதா என்பது விரிவாக ஆராயப்படவேண்டிய விடயம். அது யாருக்குரியதாக



இருந்தாலும் அந்த ஆலயத்தை மீளக்கட்டி ஒரு கோபுரம் அமைத்து ஒரு முழுமையான பௌத்த ஆலயமாக மாற்றுவது நீதிமன்றக் கட்டளைக்கு முரணானது. தொல்பொருள் திணைக்களம் பின்பற்றிவருகின்ற நடைமுறைகளுக்கும் முரணானதாகத்தான் அது உள்ளது.

இவற்றுக்கு முரணாக அரசாங்கம் செல்வதற்கு துணிந்தமைக்கு காரணம் என்ன?

இலங்கையின் வரலாற்றில் என்றுமே இல்லாதளவுக்கு ஒரு பொருளாதார நெருக்கடி உருவாகியுள்ளது. ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் பாதிக்கின்ற ஒன்றாகவே இந்த பொருளாதார வீழ்ச்சி காணப்படுகின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக தென்னிலங்கை மக்கள் போராடிய அளவிற்கு இதுவரை தமிழ் மக்கள் போராட முன்வரவில்லை என்ற ஒரு கருத்து உள்ளது. இந்தப் பொருளாதார நெருக்கடி ஒரு மாதத்திலோ அல்லது ஒரு வருடத்திலோ முடிவுக்கு வரும் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில் தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக எழுகின்ற இந்தப் போராட்டங்களில் இன, மத, மொழி வேறுபாடுகளைக் களைந்த நிலையில் இந்த நாட்டிலுள்ள அனைவரும் இணைந்து செயற்படவேண்டிய ஒரு நிலை நிச்சயமாக உருவாகும். அவ்வாறான போராட்டங்களை மழுங்கடிப்பதற்கு குருந்தலூா் பௌத்த விகாரையை மீளக்கட்டும் செயற்பாடு இருக்கலாம் என விமா்சகா்கள் சிலா் குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து போனாலும் பௌத்த மதத்துக்கு நாம் என்றும் துணையான முன்னுரிமை கொடுப்போம் என்ற ஒரு செய்தியை தீவிர சிங்கள – பௌத்த மக்களுக்குச் சொல்வதற்காகவும் இந்த முயற்சி அமைந்திருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் பௌத்த சின்னங்கள் சில காணப்பட்டதாகத் தெரிவித்தே இதனை ஒரு பௌத்த – சிங்கள மயப்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குருந்தலூர் மலைக்கு அண்மையிலுள்ள கோவில் ஒன்றின் அத்திபாரத்திலிருந்து சமீபத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று தமிழர்கள் பொறித்த கல்வெட்டாக காணப்பட்டது. தமிழர்கள் பௌத்தத்துக்கு செய்த தொண்டு குறித்தாகவே இந்தக் கல்வெட்டுக்கள் இருந்தன. ஆகவே இந்த குருந்தலூர் தொடர்பில் ஆழமாக ஆராயும்பொழுது அது தமிழர்களுக்கு உரியதா அவ்வது சிங்கள மக்களுக்குரியதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

எப்படியிருந்தாலும் இங்கு காணப்படும் பௌத்த எச்சங்கள் தேசிய மரபுரிமை அடையாளம். அதனை மரபுரிமை அடையாளமாகவே பாதுகாத்துக்கொள்ள வேண்டுமே தவிர நடைமுறைக்கு முரணாக இதனை ஒரு வழிபாட்டு ஆலயமாக மாற்ற முற்படுவது திட்டமிட்ட ஆக்கிரமிப்பாகவே இருக்கும். குறிப்பிட்ட பகுதியில் ஆதிகாலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றியவா்கள் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. வெறுமனே பௌத்த சின்னங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பகுதியை சிங்களப் பகுதியாக மாற்றியமைக்கும் முயற்சிகள் சட்டவிரோதமானது மட்டுமன்றி, இனமுரண்பாட்டை மேலும் தீவிரப்படுத்தக்கூடியது ஒன்று!

ஆனால், அதனைத்தான் சிங்கள அரசியல்வாதிகள் விரும்புகின்றார்களா?




எதிர்வரும் செப்டம்பர் 25 இல் இடம்பெற இருக்கும் இத்தாலிய பாராளுமன்ற தேர்தலில் புதிய தேசியக்கட்சியின் (Sud Chiama Nord) தலைமைவேட்பாளராக எமிலியா பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடுகிறார் ராஜசுலக்சனா தேவதாசன்.




# பக்கவடிவமைப்பாளர்கள் தேவை

**தமிழருவி பத்திரிகைக்கு வீட்டிருந்து வேலை செய்யக்கூடிய பக்க வடிவமைப்பாளாகள் தேவை. தயாரிக்கப்பட்ட பக்கங்களில் எழுத்துப் பிழைகளைத் திருத்தக்கூடிய ஒப்புநோக்களாளராக பணிபுரியக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.**

**உங்களுடைய கல்வித் தகமை, அனுபவம், மேலதிக தகமைகள் என்பவற்றுடன் சொந்தமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமாக அல்லது வாட்ஸ் ஆப் மூலமாக 20.09.2022 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.**

**- நிர்வாகி**




**சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.**

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com | வாட்ஸ் ஆப்: 0094 768320733

# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....



